# நம் வழி வேளாண்மை

பருவம் 27 | ஜனவரி – மார்ச் 2018 | இதழ் 4



**கண்டுபிடிப்பாளர் சங்கமம் , காமாட்சிபுரம், தேனி மாவட்டம்**

*இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 27 ஜனவரி – மார்ச் 2018 இதழ் 4

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம் பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே


**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com


### ஆங்கில இதழ் முகவரி


Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org


## சல்லடையில் தண்ணீர் நிரப்ப முடியுமா?

ஒரு சமயம் ஒரு ஆசிரியர் தன்னுடைய மாணவர்களுக்கு ஆக்க பூர்வமான சிந்தனையை வளர்த்து கொள்வது எப்படி என்று பாடம் நடத்தினார். பாடம் நடத்திய பின் கடற்கரைக்கு மாணவர்களை அழைத்து சென்றார். அப்பொழுது அவர்களுக்கு ஒரு சல்லடையை வழங்கினார். இந்த சல்லடையை அளித்தது மாணவர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது. ஒரு மாணவன் ஆசிரியரை நோக்கி இந்த சல்லடையை வைத்து என்ன செய்ய வேண்டும் என்று வினவினான். இதற்கு அந்த ஆசிரியர் மாணவர்களுக்கு இந்த சல்லடையை நீர் கொண்டு நிரப்ப முடியுமா என்று சவால் விடுத்தார். இளம் மாணவர்கள் இந்த சல்லடையை கொண்டு எங்ஙனம் நீர் நிரப்ப இயலும் என்று குழப்பம் அடைந்தனர். எனினும் நீரை சல்லடையில் நீர் நிரப்பி பார்த்தனர். பல வழி முறைகளை கையாண்டும் மாணவர்கள் சல்லடையில் நீர் நிரப்ப இயலவில்லை. பின்னர் ஆசிரியரிடம் இது எங்ஙனம் சாத்தியமாகும் என்று கூறினர். முடியாத ஒன்றை ஏன் தங்களுக்கு சவால் விடுத்தீர்கள் என்று கேட்டனர். இதை கேட்ட ஆசிரியர் புன்னகை புரிந்தார். சல்லடையில் தண்ணீர் நிரப்புவது சாத்தியமில்லையா என்று மீண்டும் கேட்டார் ஆசிரியர். இதற்கு மாணவர்கள் நிச்சயம் சாத்தியமில்லை என்று கூறினார்கள்.

ஆசிரியர் மாணவர்களிடமிருந்து அந்த சல்லடையை வாங்கி கடலுக்கு அருகே சென்றார். சல்லடையை தூக்கி கடலில் வீசினார். சல்லடையில் நீர் நிரம்பி மிதந்து கொண்டிருந்ததை பாருங்கள் என்று மாணவர்களிடம் ஆசிரியர் கூறினார்.

நன்றி : தேனீ – 28 (2&3)– ஏப்ரல்– செப்டம்பர்– 2017

## இயற்கை சம்பங்கி சாகுபடியில் விதை செலவை குறைத்தல்



திருமதி. பானு (49) 8வது வகுப்பு வரை படித்துவிட்டு குடும்ப வாழ்க்கையில் விவசாயத்திலும் முழுமையாக ஈடுபட்டுள்ளார். கடந்த 17 வருடங்களாக சம்பங்கி பயிர் செய்து வருகிறார். தனது கணவர் பன்னீர்செல்வம் நெய்வேலியில் முதுநிலை போர்மேனாக பணியாற்றி வருகிறார். இவருடைய 3 பெண் பிள்ளைகளுக்கும் திருமணமாகி விட்டன.

சம்பங்கியில் கொத்து சம்பங்கி பிரிட்ஜ்வால் ரகம் காசர்கோட் பண்ணையில் உள்ளன. சம்பங்கி விதைக்க ஏக்கருக்கு 360 கிலோ விதை கிழங்கு தேவைப்படுகிறது. ஒரு முறை கர்நாடகா மாநிலம் சென்று விதைக்கிழங்கு வாங்க வேண்டியிருந்தது . ஒரு கிலோ ரூ. 100 வீதம் 360 கிலோவிற்கு ரூ. 36,000 செலவாகும். இதை சாதாரண விவசாயி ஏற்றுக்கொள்ள முடியாது.

செலவை குறைக்க இவர் கிழங்கினை 2 துண்டுகளாக வெட்டி முளைக்க வைத்துப் பார்த்தார். இந்த ஆராய்ச்சியின் முடிவில் ஒரு கிழங்கை 4 ஆக நீள வாக்கில் வெட்டி அதனை பஞ்சகவ்யா, மீன் அமினோஅமிலம் கலவையில் மூழ்க வைத்து 2 மணி நேரம் வெயிலில் வைக்க வேண்டும். பின் நிழலில் உலரவைக்க வேண்டும். இதே முறை 8 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். 4 வது நாளில் வெள்ளை கலரில் குருத்துக்கள் வெளி வரும் ; 8–24 குருத்துக்கள் காணப்படும். 8 வது நாளில் பச்சை கலரில் குருத்துக்கள் காணப்படும். இவை 4 மி.மி அகலமுடையதாக இருக்கும். தற்சமயம் நடவிற்கு தயாராக உள்ளன. இந்த நிலத்தில் பாத்திகட்டி 11/2x11/2 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இதனால் நடவு செலவு 75 சதவிகிதம் குறையும். ஒவ்வொரு விதை கிழங்கு துண்டிலிருந்து குறைந்தது 8 குருத்துக்கள் வெளிப்பட்டு வரும்.

### விதை கிழங்கை 4 துண்டுகளாக நீள வாக்கில் வெட்டுதல்



### விதை நேர்த்தி கலவை

சம்பங்கி விதை கிழங்கை கீழ்கண்டவாறு கரைசல் தயார் செய்து மூழ்கி எடுத்து காய வைத்து வர வேண்டும்.

பசுமாட்டு சாணம் – 10 கிலோ, கோமியம் – 10 லிட்டர் இத்துடன் 1 கிலோ கலப்பு மாவு, திரு நீறு – 500 கிராம், பறவைகள் எச்சம் –500 கிராம், மீன் அமினோஅமிலம்– 1 லிட்டர் சேர்த்து தயிர்பதம் வருமாறு கலக்க வேண்டும். (கலப்பு மாவில் கேழ்வரகு, கம்பு, பருப்பு, உளுந்த மாவு போன்றவை கலந்து ரைஸ்மில்லில் கிடைக்கும். இத்துடன் அஸோஸ்பைரில்லம் –100 கிராம், உமி– 100 கிராம், ஆமணக்கு எண்ணெய் –100 மி.லி சேர்க்க வேண்டும்.

திருநீறு தயாரிக்க 10 கிலோ எருவைத்தட்டி 1 லிட்டர் நெய் சேர்த்து காய வைத்து சாம்பலாக்க வேண்டும். இது 1/2 கிலோ சேர்க்க வேண்டும். இத்துடன் 500 கிராம் பறவைகளின் எச்சம் சேர்க்க வேண்டும்).

### காய வைப்பு முறை

முதல்நாள் விதை நேர்த்தி கரைசலில் மூழ்கி எடுத்து 1 மணி நேரம் காலையில் (காலை 6–7 மணி) 1 மணி நேரம் வெயிலில் வைக்க வேண்டும். பின் நிழலில் உலர வைக்க வேண்டும். மாலையில் மீண்டும் ஒரு தடவை மூழ்கி எடுத்து மாலை வெயிலில் (மாலை 5–6 மணி) வெயிலில் உலர வைக்க வேண்டும். இதனை 2 வது நாளில் கரைசலில் மூழ்கியபின் காலை 2 மணி நேரமும், மாலை 2 மணி நேரமும் வெயிலில் வைக்க வேண்டும். 3 வது நாளில் வெயிலில் காயவைத்தலை 4 மணி நேரம், 4 வது நாளில் 6 மணி நேரம், 5 வது நாளில் 8 மணி நேரம் என்று கூட்டி 8 வது நாளில் பாலிதீன் பையில் மண், தொழுஉரம்

இட்டு நட வேண்டும். இதனை 15 நாட்கள் வரை பையில் வைத்து நீர் தெளிக்க வேண்டும். கரும்பு கணுக்கள் போல் உள்ள இந்த பருக்கள் 3 அங்குலம் உயரம் வந்தவுடன் இது நடவு செய்ய உகந்தது என தெரிந்து கொள்ள வேண்டும். நடும் சமயம் மண்ணில் மூன்றில் 2 மடங்கு தரையில் உள்புறம் மீதி பகுதி தரைக்கு மேலேயும் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும்.

நடும்சமயம் பாத்தி 6 அடி அகலம், 50 அடி நீளமாக இருந்தால் 4 வரிசை நடலாம். செடிக்கு செடி 1 1/2 அடி இடைவெளி இருக்க வேண்டும். பூ எடுக்கும் சமயம் வாய்கால் பகுதியிலிருந்து 2 வரிசைகள் வரை வளைத்து பூ அறுவடை செய்ய வேண்டும்.

பூச்செடிகளுக்கு இயற்கை உரமிடுவதால் 4 நாட்கள் ஆனாலும் பறித்த பூக்கள் வாடாது. இரசாயன உரமிட்டால் 24 மணி நேரத்தில் வாடிவிடும். இயற்கை உரம் இட பல வகையான பிண்ணாக்கு உரம் (கடலைபிண்ணாக்கு , தேங்காய் பிண்ணாக்கு போன்ற 18 வகை பிண்ணாக்கு) – 1 கிலோ, அஸோஸ்பைரில்லம் –1/2 கிலோ , ரைசோபியம்–1/2 கிலோ , 1 டயர் வண்டி தொழு உரம், 2 சாக்கு கோழி உரம், பன்றி எரு 5 கிலோ, குதிரை சாணம் 5 கிலோ சேர்த்து நித்தமும் நீர் தெளித்து வர வேண்டும். 3–5 நாள் கழித்து பயன்படுத்தலாம். இந்த செறிவூட்டப்பட்ட உரத்தை 1 கிலோ எடுத்து சாதாரண மக்கிய உரம் 4 கிலோ உடன் சேர்த்து நிலத்தில் தூவிவிட்டு உடனே நீர் பாய்ச்ச வேண்டும்.

**வேரழுகல் நோய்க்கு**

100 கிராம் சாம்பலை 10 லிட்டர் கோமியத்தில் கலந்து வேப்பிலை கொண்டு தெளிக்க வேண்டும். இந்த நோய் மழைக்காலத்தில் தென்படும். இந்த கரைசலில் நீர் சேர்க்கக் கூடாது. இந்த கரைசல் வாசனைக்கே வேர் பூச்சிகள், நோய் அணுகாது.

**பூ அதிகம் எடுக்க**

மழைக்காலத்தில், குளிர்காலத்தில் பூ திறட்சியாக காய்க்கும். 1 கிலோவுக்கு 450 பூக்கள் காணப்படும். பூ எண்ணிக்கை கூடி திறட்சி குறையும் சமயம் தேங்காய்பால் மோர் கரைசல் தெளிக்க வேண்டும். இது ஏக்கருக்கு 10 லிட்டர் தெளிக்கலாம்.

தயாரிப்பு முறை: தேங்காய் 10 எடுத்து துருவிப் பால் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் இளநீர் தண்ணீர் சேர்த்து 5 லிட்டர் தயாரிக்க வேண்டும். கடைந்த மோர் 5 லிட்டர் அல்லது தயிர் 2.5 லிட்டர் சேர்த்து கலந்து விட வேண்டும். ஒரு வாரம் புளிக்க வைக்க வேண்டும். இதனை ஓர் ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

30 நாட்களுக்கு 1 முறை நீர்கட்டினால் வேரழுகல் நோய் தவிர்க்கலாம். பிற விவசாயிகள் 10–20 நாட்களுக்கு ஒரு முறை பாய்ச்சுவர். சம்பங்கி நீர் அலர்ஜி பயிர். அதிகமாக பாய்ச்சக் கூடாது. குறையவும் கூடாது. நீர்பாய்ச்சப்படும் வாய்க்கால் 1 அடி ஆழம் 11/2 அடி அகலம் உடையதாக இருக்க வேண்டும். இதில் கட்டும் நீரே மண்ணில் ஊடுறுவி ஈரப்பதம் இரண்டு வரிசைக்கு சென்றுவிடும். பெட்டில் நீர் பாய்ச்சக் கூடாது. அடுத்த 6 அடியில் உள்ள வாய்க்கால் வாய் மூலம் 2 வரிசைகளுக்கு ஈரப்பதம் பரவிவிடும். வாய்க்கால்பகுதி 20 சதவீதம், பயிர்பகுதி 80 சதவீதம் வேண்டும். சம்பங்கி பயிர் 6 மாதத்தில் பூக்க ஆரம்பித்து வருடம் முழுவதும் பூ பூக்கும். இந்த பிரிஜ்லால் ரகம் நல்ல உயரமாக இருப்பதால் பூ பறிப்பது பெண்களுக்கு எளிது. 4 வருடம் வரை பூ பூக்கும். பூ எடுத்து விட்டு அடுத்த பயிர் நெல் சாகுபடி செய்து மீண்டும் சம்பங்கியை பயிரிடலாம்.

சம்பங்கியில் ‘‘கோரை’’ போன்ற களைச்செடிகள் முளைக்கும். இதற்கு நிலக்கடலையை ஊடு பயிராக பயிர் செய்வதால் களைப்பிரச்சனை வராது.

பானு பன்னீர் செல்வம்
சி1 முந்திரி வீதி
வட்டம் 25, நெய்வேலி –3
கடலூர் மாவட்டம்
செல் : 9442657618

திருமதி பானுவுக்கு 5–6 மே 2018 அன்று ‘‘சென்டக்ட்’’ வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்ற அடித்தள கண்டுபிடிப்பாளர் சங்கமம் கூட்டத்தில் சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது ரூ. 5,000 மும் சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்த 2 நாட்கள் கருத்தரங்கை சென்டெக்ட் கே.வி.கே மற்றும் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

## ஆந்தகுடி வேதையனின் இயற்கை வேளாண்மை



நாகபட்டிணம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுகா ஆந்தகுடி கிராமம் வடக்கு தெருவில் வசிப்பவர் திரு. கே. வேதையன் (வயது 39). இவர் பி.ஏ வரை படித்துள்ளார். இவர் டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு 12 ஏக்கர் விவசாய

நிலம் உள்ளது. இவரிடம் 4 மாடுகள் உள்ளன. இவர் கடந்த 3 வருடங்ளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் ஒரு மாட்டிலிருந்து வருடத்திற்கு 8 டன் சாண உரம் கிடைக்கிறது என்று கூறுகிறார்.

**இயற்கை முறையில் நெல் சாகுபடி**

முதலில் கோடையில் நிலத்தை 4 முறை கோடை உழவு செய்து நிலத்தை சமன் செய்து சீர் செய்து வருகிறார். பின்பு ஏக்கருக்கு 4 டன் என்ற விகிதத்தில் ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவார். ஊட்டமேற்றிய தொழு உரம் கீழ் கண்டவாறு தயார் செய்யப்படுகிறது.

**ஊட்டமேற்றிய தொழு உரம்**

தொழு உரம் – 500 கிலோ, கடலை புண்ணாக்கு – 10 கிலோ, வேப்பம் புண்ணாக்கு – 10 கிலோ, நுண்ணுயிர் உரம் – 5 கிலோ ( பாஸ்போ பாக்டீரியா, சூடாமோனஸ் போன்றன) கோமியம் – 20–25 லிட்டர். மேற்கண்ட விகிதத்தில் கலந்து தென்னை மட்டை அல்லது சாக்கு போட்டு மூடி வைக்க வேண்டும். அப்போதுதான் பாக்டீரியா எண்ணிக்கை அதிகரிக்கும். இம்மூட்டத்தை 1 மாதம் வரை வைத்திருக்க வேண்டும். இடையில் இரண்டு முறை கிளறி விட வேண்டும். ஒரு மாதம் கழித்த பிறகு ஊட்டமேற்றிய தொழு உரம் தயாராகிவிடும். பின்பு எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஆட்டுக்கிடை ஏக்கருக்கு 3 கிடை அமர்த்தப்படுகிறது.

**நாற்றங்கால் தயார் செய்தல்**

ஜூலை மாதம் 15 தேதிக்கு மேல் நாற்றங்கால் தயார் செய்து விதையிடப்படுகிறது. ஏக்கருக்கு 20 குழி என்ற அளவில் நாற்றங்கால் தயார் செய்து ஏக்கருக்கு 8 கிலோ அளவில் விதையிடப்படுகிறது. இவர் விதையிட்ட 10 ம் நாள் பஞ்சகவ்யா தெளிக்கப்படுகிறது. பின்பு இலை பசுமையாக வரும்போது அதாவது நாற்று விட்டு 15 வது நாள் பிறகு மூலிகை பூச்சி விரட்டி தெளிக்க வேண்டும்.

**நாற்று நடவு**

நடவு 20 நாள் முதல் 25 நாட்களுக்குள் செய்ய வேண்டும். நடவு ஒற்றை நாற்று நடவு முறையில் நடவு செய்யப்படுகிறது. நடவு செய்த 15 ம் நாள் பஞ்சகவ்யா ஒரு கேனுக்கு 300 மி.லி என்ற விகிதத்தில் தண்ணீருடன் கலந்து ஏக்கருக்கு 9–12 கேன் தெளிக்கப்படுகிறது. பின்பு 15 நாள் கழித்து மூலிகை பூச்சி விரட்டி அதே விகிதத்தில் கலந்து தெளிக்கப்படுகிறது. பின்பு 40–50 நாளில் 10 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் கோமியம் கலந்து கை தெளிப்பான் மூலம் தெளிக்கப்படுகிறது. இதனால் நெற்பயிரில் நெல் பதர் வராது.

**பருத்திபோட்ட வயலில் மகசூல் கூடுதல்**

இவர் வருடந்தோறும் 4 ஏக்கர் நிலத்தில் பருத்தி விவசாயம் செய்து வருகிறார். பருத்தி அறுவடை முடித்தபின் பருத்தி செடிகளை வயலில் தண்ணீர் பாய்ச்சி மடக்கி உழுது விடப்படுகிறது. பின்பு 7 நாள் கழித்து மறு உழவு செய்யப்படுகிறது. மறுபடியும் 7 நாள் கழித்து மறு உழவு செய்யப்படுகிறது. இதனால் தழைச்சத்து வயலுக்கு அதிகமாக கிடைக்கிறது. இதன் மூலம் ஏக்கருக்கு 27 மூட்டை முதல் 30 மூட்டை நெல் மகசூல் கிடைக்கின்றது.

**பயறு விவசாயம்**

நெல் வயலில் பயறு விதைத்த 15 ம் நாள் பஞ்சகவ்யா 200 மி.லி ஒரு டேங்க் தண்ணீருடன் கலந்து ஏக்கருக்கு 9 டேங்க் என்ற விகிதத்தில் தெளிக்கப்படுகிறது. பின்பு 5 நாள் கழித்து மூலிகை பூச்சி விரட்டி மேற்கண்ட விகிதத்தில் தெளிக்கப்படுகிறது. பின்பு 10 ம் நாள் மீன்அமில கரைசல் மேற்கண்ட விகிதத்தில் தெளிப்பதால் பயிருக்கு கால்சியம் சல்பர் சத்து கிடைக்கின்றது. பின்பு 15 நாள் கழித்து மூலிகை பூச்சி விரட்டி தெளிக்கப்படுகிறது. பூக்கும் தருவாயில் தேவைப்பட்டால் பஞ்சகவ்யா தெளிக்கலாம். இதன் மூலம் ஏக்கருக்கு 3–4 குவிண்டால் மகசூல் கிடைக்கின்றது.

**எள் சாகுபடி**

நிலத்தை உழுதுவிட்டு ஏக்கருக்கு 1 டன் என்ற விகிதத்தில் ஊட்டமேற்றிய தொழு உரம் இட வேண்டும். எள் 15'X 15' பாத்தி அமைத்து அதில் எள் தெளித்த பிறகு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். எள் தெளித்த 10ம் நாள் பஞ்சகவ்யா பின்பு 10 நாள் கழித்து அமிர்தகரைசல் பின்பு 10 நாள் கழித்து மீன் அமினோஅமிலம் தெளிக்க வேண்டும். பின்பு மீண்டும் பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும். 30 ம் நாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தில் ஈரம் இல்லையென்றால் செடி இலை தழை கீழாக கவிழ்ந்துவிடும். அப்போது தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 60–75 நாளில் அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு ஒரு குவிண்டால் மகசூல் கிடைக்கிறது.

**வாழை சாகுபடி**

1/2 ஏக்கர் நிலத்தில் நாட்டு வாழை, ரஸ்தாலி, பூவன், மொந்தன் வாழை கன்றுகள் 2 'X 2' இடைவெளியில் நடவு செய்துள்ளார். ஒரு மரத்தின் இலை முடியும் இடத்தில் மறு மரத்தின் நடவு குழி இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். ஒரு கன்றுக்கு 10 கிலோ தொழு உரமிட வேண்டும். 15–20 நாட்கள் பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும். வாடல் நோய் வந்தால் புளிச்ச மோர் – 1/2

லிட்டர் நாட்டு வெல்லம் – 1/4 கிலோ .இரண்டையும் கலந்த கலவையில் 300 மி.லி வீதம் டேங்க் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**வரப்பு உளுந்து சாகுபடி**

நெல் வயல்களின் நான்கு பக்க வரப்புகளில் வரப்பு உளுந்து தெளித்து மகசூல் எடுக்கப்படுகிறது. நெல் கதிர் வந்த பிறகு வரப்புகளில் ஆடுதுறை – 5 , வம்பன் போன்ற வகை உளுந்து தெளிக்கப்படுகிறது. வரப்பு உளுந்து தெளிப்பதனால் ஏக்கருக்கு 50 கிலோ மகசூல் கிடைப்பதாக கூறுகிறார்.

**தீவனப்புல் வளர்ப்பு**

இவரது மாடுகளுக்கு 1 ஏக்கர் நிலத்தை தீவனப்புல் வளர்ப்பதற்காக பயன்படுத்தி வருகிறார். தீவனப்புல் 50 கிராம் – 4 வகை தீவனப்புல் 8 அடி பாத்தி அமைத்து ஏக்கருக்கு 20 கிலோ விதை என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கர் தீவனப்புல் வளர்ப்பு இவரது நான்கு மாடுகளுக்கு போதுமானதாக உள்ளது.

கே. வேதையன்
த/பெ. கருப்பையன், 2/38 வடக்கு தெரு,
ஆந்தகுடி அஞ்சல், கீழ்வேளூர் தாலுகா, நாகை மாவட்டம்
செல் – 8973734358

## கால்நடைகளில் சினைபிடித்ததை கண்டறியும் சோதனை

கால்நடைகளில் சினைபிடித்ததை கண்டறிய மருத்துவர்கள் மாட்டின் பிறப்புறுப்பின் வழியாக கையை நுழைத்து தடவி பார்த்து கூறுகின்றனர். இவ்வாறு செய்யாமல் ஆடு, மாடுகள் சினைபிடித்ததாக இருப்பதை இவைகளின் மூத்திரத்தை வைத்து தெரிந்து கொள்ளலாம். இது சம்பந்தமாக நம் வழி வேளாண்மை பருவம் 15 இதழ் 2 ல் (ஜூலை– செப்டம்பர் 2006) பிரசரித்திருந்தோம். நம் வழி வேளாண்மை குழுமம் (Honey bee Network) ஒடிஸா மாநில ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பலராம்சாகு என்பவர் இந்த முறையை 100 பசுமாடுகளுக்கும், சில வெள்ளாடுகளிலும் 3 பெண்களிலும் ஒரு புலியிடமும் சோதனை செய்து பார்த்து உறுதி செய்துள்ளார். இதன்படி சினைபிடித்த பிராணி, சினைபிடிக்காத பிராணிகளின் மூத்திரம், நீர் என 3 சிரட்டைகளில் பாசிப்பயறு 100 விதைகளை எடுத்து 5 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் துணியில் கட்டிவிட்டால் சினைபிடித்த மாட்டு கோமியம் 10 சதவீத முளைப்பும் சினைபிடிக்காத கோமியத்தில் 70 சதவீத முளைப்பும் நீரில் 100சதவீத முளைப்பு இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

பலராம்சாகு, புவனேசுவர், ஒடிசா
drbalarams10@gmail.com
Cell: 9437290258

## வெள்ளாட்டிற்கு வரும் தொற்று நோய்

**துள்ளுமாறி நோய்க்கு**

வெள்ளாடுகளை தாக்கும் முக்கிய நோய் துள்ளு நோயாகும். (Enterotoxaemia) இந்நோய் காரணமாக மழை காலங்களில் ஏராளமான வெள்ளாடுகள் இறந்து போகின்றன. இருப்பினும் இன்றும் பலர் துள்ளுநோய் வெள்ளாடுகளைத் தாக்காது என்றே கருதி வருகின்றனர். இந்நோய் தாக்குதல் ஏற்படும்போது செம்மறி ஆடுகள் துள்ளி சாகும். வெள்ளாடுகள் துள்ளாது. கத்திச் சாகும். ஆகவே தஞ்சைப் பகுதியில் இந்நோய்க்கு கத்தல் நோய். திருநெல்வேலிப் பகுதியில் கூப்பிட்டான் நோய் என்று பெயர்.

இது ஒரு தொற்றுநோய் அல்ல. இதனை பெருந்தீவன நோய் என்பார்கள். காரணம் இந்நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகள் சாதாரணமாகவே ஆட்டின் குடல்களில் வாழும். ஆனால் ஆடுகள் மழைகாலத்தில் எங்கும் செழித்து வளரும் புல் பூண்டுகளை அதிக அளவில் உண்டுவிடும். இச்சூழ்நிலையில் இந்த நுண்ணுயிரிகள் நச்சு உற்பத்தி செய்கிறது. இதுவே துள்ளு நோய்க்கு காரணமாக அமைகிறது. பாதிக்கப்பட்ட ஆடுகள் கழியும். புது புல் காரணமாக கழிச்சல் ஏற்படுகிறது என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. வீரிய நிலையில் நோய்கண்ட ஆடு மயங்கிய நிலையில் படுத்துவிடும். கத்திக் கொண்டு உடல் நடுக்கத்துடனும் இருக்கும். இச்சூழ்நிலையில் எவ்வகை சிகிச்சையும் பலன் அளிக்காது. மிகத் தீவிர நிலையில் மேய்ந்து வரும் ஆடுகள் நடு இரவில் அல்லது அதிகாலையில் கத்திக் கொண்டு விழுந்து இறந்து விடும்.

**மூலிகை வைத்தியம்**

ஆட்டுக்கு வரும் துள்ளுமாறி நோய்க்கு : ஆட்டுக்கு ஜன்னி மாதிரி வந்து சுத்தி சுத்தி விழுந்து 2 நாட்களில் இறந்துவிடும். இந்த நோய் வெள்ளாடுகளுக்கு மழை காலத்தில் வரும். இதற்கு நல்லெண்ணெயில் மஞ்சள் தூள் கலந்து காய்ச்ச வேண்டும். ஒரு கரண்டியில் சூடாக எடுத்து கொம்பின் இரு பகுதிகளுக்கும் நடுவில் தடவ வேண்டும். பின்னர் சாம்பிராணி புகை காட்ட வேண்டும்.

சீனிவாசன்
வண்டிப்பாளையம், மரக்காணம் வழி
விழுப்புரம் மாவட்டம்

## காய்கறி பயிர், ஊடுபயிர் மூலம் வருமானம்

கத்தரிக்காய் செடியில் தண்டுப்பூச்சி மற்றும் வேர்ப்புழு போன்ற காரணத்தினால் செடிகள் செத்து மடிந்து விடும். அவ்வாறு ஏற்படாமல் இருக்க வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ தினமும் ஆட்டுக்குட்டி ஆடு போடும் ஆட்டு புழுக்கை இரண்டையும் கலந்து நன்கு அரைத்து (ரோட்டில் போட்டு) பின்பு அதனையும், வேப்பம் புண்ணாக்கு இரண்டையும் நன்கு கலந்து தண்ணீர் விட்டு குவியல் போல சிறிது நேரம் ஊற வைத்து அப்படியே கோபுரம் அடுக்கு வைத்து விட்டு பின்பு காலை 9 மணிக்கு அல்லது மாலை 5 மணிக்கு மேல் வேர் பகுதியின் அருகில் 4 விரல்கட்டை அளவு வைத்து தண்ணீர் விட வேண்டும். வேர் பூச்சி மற்றும் கொண்டை பூச்சி, செத்து காய், பூ சிவப்பாக இருக்கும். அப்படி கத்திரி இறக்கும் தருவாயில் முள்ளங்கி விதை, கடலை விதை அதனுடன் ஊடு பயிறு போட்டால் நாம் செலவு செய்யும் பணத்திற்கு மேல் வெகு சுலபமாக எடுக்கலாம். பூசணிக்காய் விதைபாட்டால் ரூ. 50 க்கு வாங்கி 50 குழி போட்டால் சுமார் ரூ. 9000 வரை லாபம் கிடைக்கும். பரங்கி விதை ரூ. 30க்கு வாங்கி ஊடு பயிராக போட்டால் சுமார் ரூ. 12000 வரை லாபம் கிடைக்கும். 100 குழி நிலத்தில் ரூ. 30 க்கு புடலைங்காய் விதை வாங்கி பயிரிட்டால் குத்தகைக்கு (ரூ. 2,500) நிலம் பயிர் விதைத்தால் உரம் மற்றும் தழையுரம், சாம்பல்உரம் (விரட்டி எரிந்தது) போட்டு ஆட்கள் கூலி சுமார் ரூ.4000 மொத்தம் ரூ.6530 / செலவு செய்தால் ரூ. 20,000 முதல் ரூ. 35,000 வரை லாபம் ஈட்டலாம்.

கடலை சாகுபடி மிகவும் சிறந்த சாகுபடி பச்சை 1/4 கிலோ கடலை விதை வாங்கி 50 குழி நிலத்தில் பயிரிட்டால் அதனுடன் முள்ளங்கி விதை இரண்டு 11/2 மாதத்தில் முளைத்து காசு கிடைக்க வழி செய்து விடும். கடலை சாகுபடியில் ரூ. 10,000– 15,000 வரை, ரூ.30 க்கு முள்ளங்கி விதை ரூ.2,000 – 3,000 சுலபமாக கிடைக்கும் (2 நபர் மட்டும் போதும் வேலையாட்கள் ஒருவர், முதலாளி ஒருவர்).

நா. தனசேகரன்
2/41 அக்ரஹாரம்
சூலமங்கலம்
பசுபதிகோவில் அஞ்சல்
தஞ்சாவூர் மாவட்டம்
செல் : 9715109946

## மோளையாடு வளர்க்கும் ராஜாவின் அனுபவங்கள்



ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ராஜா 50 வெள்ளாடுகள் வளர்த்து வருகிறார். இவரிடம் மோளையாடு என்ற வெள்ளை நிற கொம்பு இல்லாத வெள்ளாடுகள் உள்ளன. இவர் தனது தோட்டத்திற்கு தேவையான எரு கிடைப்பதற்கு ஆடுகளை வளர்த்து வருகிறார். தனது தோட்டத்தில் மஞ்சள், கரும்பு, மக்காச்சோளம், பட்டுபுழு செடி பயிரிடுகிறார். தனது ஆடுகளுக்கு வரும் நோய்களுக்கு கீழ்கண்ட முறையில் வைத்தியம் செய்கிறார்.

1) கழிச்சலுக்கு : சோம்பு, வெல்லம் தூள் செய்து நீருடன் கலந்து குடிக்க கொடுக்கிறார்.

2) ஆடுகளின் மேல் காணப்படும் நுழையாம் பூச்சிகளுக்கு கடலை எண்ணெய் 50 மி.லி உடம்பில் தடவி விட்டால் பூச்சிகள் வராது.

3) வயிறு உப்பிசத்திற்கு : மிளகாய் தூளை நாக்கில் தொட்டு விட வேண்டும்.

4) மலைவேம்பு தழை : ஆடுகளுக்கு நித்தம் 3 கிலோ கொடுத்தால் நல்ல வளர்ச்சி கிடைக்கும். குடற்புழுவும் கட்டுப்படும். 4 மாதங்களில் 15 கிலோ எடை குறையாமல் வளர்ச்சி கிடைக்கும். குட்டிகளை விற்பனை செய்கின்றார்.

ஆர். ராஜா
குருவன் தோட்டம், ஜி.எஸ்.காலணி அஞ்சல்
அந்தீயூர், ஈரோடு மாவட்டம்
செல் : 9942585666

## இராஞ்சியில் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி



ஜார்கன்ட் மாநிலத்தில் மகளீர் மேம்பாட்டு மையம் மூலம் மார்ச் 13–14 தேதிகளில் 2 நாட்கள் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி மாவட்ட அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டது. இதில் பீஹார், உத்திரபிரதேசம், ஜார்கன்ட் மாநிலங்களிலிருந்து 32 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் மூலிகை மசாலா உருண்டை, மத்தான் தைலம், குடற்புழு நீக்க மருந்து ஆகியன செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியை திரு. விவேகானந்தன், சேவா டாக்டர். இரவிந்திர குமார் கொடுத்தனர்.

**கால்நடைகளின் பேன், உண்ணிகளுக்கு**

கால்நடைகளை தாக்கும் வெளிப்புற ஒட்டுண்ணிகள் உண்ணி, பேன், தெள்ளு பூச்சி ஆகும். இவைகள் கால்நடைகளில் நோய்ப் பரப்புகின்றன. கடித்து இரத்தம் உறிஞ்சி எரிச்சல் உண்டாக்கி மேய்ச்சலுக்கு தடையாக உள்ளன. இதற்கு புங்க எண்ணெய் 100 மி.லி, சல்பர் (கந்தக பவுடர்) 10 கிராம், சூடம் 10 கிராம் (தூள்) கலந்து மேல் பூச்சாக உடம்பில் பூசி விட வேண்டும். இதனை 2 –3 நாட்கள் கழித்து கழுவினால் போதும். இம்முறையை 3 மாதங்களுக்கு ஒரு முறை கடைபிடிக்கலாம்.

இதனையை எங்கள் பன்றி பண்ணையில் கடைபிடித்து வருகின்றோம்.

டாக்டர். இரவிந்திர குமார்
கால்நடை மருத்துவ கல்லூரி
இராஞ்சி, ஜார்க்கன்ட் மாநிலம்
செல் : 9031978155, 7004815767

## ஜார்கன்ட்டில் மூலிகை மசாலா உருண்டை தயாரித்து கொடுத்தல்



நான் கடந்த 4 வருடங்களாக மகளீர் குழுக்களுக்கு கால்நடை அபிவிருத்தி பணியாளராக பணி புரிந்து வருகிறேன். எங்கள் ஊரில் சுமார் 500 வெள்ளாடுகள் உள்ளன. சென்ற வருடம் ஆடுகளுக்கு நோய் வந்து பல சேதாரம் ஆகிவிட்டன. 2 ஆண்டுகளுக்கு முன்பு கால்நடை மூலிகை வைத்திய பயிற்சியில் கலந்து கொண்டு பல தயாரிப்புகளை தெரிந்து கொண்டேன். கால்நடை மாசாலா உருண்டை தயார் செய்து ஆடுகளுக்கு கொடுத்த பின் ஆரோக்கியமாக உள்ளன. என்னிடம் 10 ஆடுகள் உள்ளன. இவைகளும் நோயின்றி நல்ல வளர்ச்சியுடன் காணப்படுகின்றன. உடல் எடை 26 கிலோ உள்ள ஆடு ரூ. 7,500 க்கு விற்றேன். இது போன்று 6 ஆடுகள் விற்றதில் ரூ. 40,000 எனக்கு கிடைத்தது. நான் மாசாலா உருண்டை தயார் செய்வதை பல குழுக்களுக்கு பயிற்சியாக கொடுத்துள்ளேன்.

**மசால் உருண்டை தயாரிக்கும் முறை:**

சீந்தில்கொடி 200 கிராம், ஆவாரம் 100 கிராம், சோற்று கற்றாழை 100 கிராம், வெற்றிலை 10, கறிவேப்பிலை 100 கிராம், துளசி 50 கிராம், தேங்காய்துருவல் 150 கிராம், வெள்ளைப்பூண்டு 50 கிராம், மஞ்சள் 50 கிராம், மிளகாய்வத்தல் 50 கிராம், சுக்கு 50 கிராம், இந்துப்பு 50 கிராம், வெந்தயம் 50 கிராம், ஓமம் 50 கிராம், மிளகு 10 கிராம், சோடாஉப்பு 20 கிராம், வெல்லம் 100 கிராம் சேர்த்து அரைத்து எலுமிச்சம்பழ அளவு உருண்டை பிடித்து (25 கிராம்) ஒரு ஆட்டிற்கு ஒரு தடவை மட்டும் தர வேண்டும். இந்த உருண்டைகளை தயார் செய்த 8 நாட்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும்.

பாலம்தினா டிரிக்கி
அங்காரா, ஜார்கன்ட் மாநிலம்
செல் : 7295880503

## தன்னேசிங்கின் செம்மறி ஆடு பராமரிப்பு



இராஜஸ்தான் மாநிலத்தில் பிக்காணிர் மாவட்டத்தில் தன்னேசிங் செம்மறிஆடு வளர்த்து வருகிறார். இவரிடம் 200 மாக்ரா என்ற இன செம்மறி ஆடு உள்ளன. இத்துடன் 15 வெள்ளாடுகள், 2 பசுமாடுகள், 2 எருதுகள், 1 கழுதை உள்ளன. இவர் மழைக்காலம் வரும் வரை கங்கா நகர் மாவட்டத்தில் ஆடுகள் மேய்த்துவிட்டு மழை ஆரம்பிக்கும் சமயம் சொந்த ஊரிற்கு வந்து மேய்ப்பார். 6 மாதக் குட்டிகளை ரூ.3000 க்கு விற்று விடுகிறார். ஓடை அடித்த ஆடுகள் 2 வருடங்களில் ரூ. 7000க்கும் அதிகமாக விலை போகும். வருடத்தில் 200 கிலோ ரோமம் கிடைக்கும். இவர் பின்பற்றும் சில வைத்திய முறைகள் பின்வருமாறு:

1. காயம் அல்லது புண்ணிற்கு கடுகு எண்ணெயுடன் மஞ்சள் கலந்து தட வேண்டும்.

2. குடற்புழு நிக்கத்திற்கு படிகாரக்கல் 200 கிராம் பொடித்து சுடுநீரில் கலந்து 50 ஆடுகளுக்கு உள்ளே புகட்ட வேண்டும்.

3. ஒட்டுண்ணிகளுக்கு நாசிப்பகுதி வெடிப்பு ஒட்டுண்ணிகளால் உண்டாகும். இதற்கு பேட்டரி கரி தூளுடன் இன்ஜின் ஆயிலை கலந்து பாதிப்பான பகுதியில் மேல் பூச்சாக தடவ வேண்டும்.

4. வயிறு உப்பிசத்திற்கு ஆவாரம் தழை கசாயத்தை உள்ளே கொடுக்க வேண்டும்.

5. புழு வைத்த புண்ணிற்கு பேய்க்குமட்டி என்ற செடியின் வேர் எடுத்து அரைத்து பூச வேண்டும்.

தன்னேசிங்
கோட்டா, கொயைத் தாலுகா
பிக்காணிர் மாவட்டம், இராஜஸ்தான்

## சேசுராஜபுரம் பன்னீர் செல்வத்தின் மூலிகை வைத்திய முறைகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டை தாலுகா, சேசுராஜபுரத்தில் வசிப்பவர் திரு. எஸ். பன்னீர் செல்வம், இவருக்கு வயது 46 . இவர் 3ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 3 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இவர் கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் மூலிகை வைத்யம் செய்து வருகிறார். எந்த மூலிகையை எடுத்தாலும் அதை வணங்கி எடுத்தல் இவரது சிறப்பாகும்.

### கழிச்சலுக்கு

வீலி இலை 2 கைபிடி எடுத்து தண்ணீர் சேர்க்காமல் நன்றாக அரைத்து 1/2 லிட்டர் பசும் பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் 2 கொட்டம் மாட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க கழிச்சல் குணமாகும். (அல்லது) மத்திமரபட்டை – 1/2 கிலோ, நாக மர பட்டை – 1/2 கிலோ இரண்டையும் தண்ணீரில் 1 இரவு ஊறல் போட்டு அதன் சாற்றை 1 லிட்டர் அளவுக்கு மாட்டுக்கு உள்ளுக்கு கொடுத்தால் கழிச்சல் குணமாகும்.

### கோமாரி நோய்க்கு

சுண்டைக்காய் இலை – 1 கிலோ, (காட்டு சுண்டைக்காய்) புரசு மர இலை – 1 கிலோ, மாட்டு கோமியம் – 1 லிட்டர், முன்றையும் கொதிக்க வைத்து வெதுவெதுப்பான சூட்டில் புண்ணின் மேல் ஊற்ற புண் குணமாகும். மேலும் பன்றி நெய் – 30 மி.லி, வாழைபழம் – 1 (மொந்த வாழை) இரண்டையும் பிசைந்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும். வாழை பழம் கொடுத்தால் குடல் நரம்பு நல்ல உறுதி படும். மேலும் நாட்டு கம்பு (பொட்டு கம்பு) கொத்தமல்லி இலை சின்ன வெங்காயம் சேர்த்து கூழ் காய்ச்சி மாட்டுக்கு கொடுக்க வேண்டும்.

### தொண்டை அடைப்பான்

தொண்டையில் வீக்கம் உள்ள இடத்தில் விளக்கெண்ணையை தடவி விட்டு விட வேண்டும். பின்பு வெங்குச்சாங்கல்லை நெருப்பில் சுட வைக்க வேண்டும். பின்பு அந்த கல்லை எருக்க குச்சியில் எடுத்து வீக்கம் உள்ள இடத்தில் கல்லால் சுட வேண்டும். அவ்வாறு செய்தால் தொண்டை அடைப்பான் நோய் குணமாகும்.

### இரத்த கழிச்சல்

பெரிய கட்டு கொடி – 1 கிலோ, சித்தாச்சாள் மர பட்டை – 1 கிலோ, மத்தி மர பட்டை – 1 கிலோ, நாக மர பட்டை – 1 கிலோ, பெரு மருந்து கொடி – 1 கிலோ இவற்றுடன் 5 லிட்டர் தண்ணீர் ஊற்றி விறகு அடுப்பில் இரவு சுட

வைக்க வேண்டும். தண்ணீர் பாதி அளவு வரும் வரை சுட வைத்து கசாயமாக்கி மாட்டுக்கு கீழ்கண்டவாறு கொடுக்க குணமாகும். முதலில் 1 லிட்டர் இரண்டாவது முறை 1/2 லிட்டர் அளவும் 3 வது முறை 1/2 லிட்டர் அளவுக்கு கொடுத்து வர குணமாகும்.

**மாடு பருவத்திற்கு வர**

செம்பிரண்டை கிழங்கு இரண்டு கிலோ எடுத்து உரலில் இடித்து 2 லிட்டர் மோரில் கலந்து மாட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும். 8 நாள் கழித்து மீண்டும் ஒரு முறை அவ்வாறு கொடுக்க மாடு பருவத்திற்கு வந்து விடும்.

**மாடு சினை பிடிக்க**

வேலி பருத்தி இலை 1 கைபிடி இடித்து மோர் கலந்து மாட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும். மாட்டுக்கு காளை அல்லது சினை ஊசி போட்ட உடன் கொடுத்தால் உடனே சினை பிடித்து விடும்.

எஸ். பன்னீர் செல்வம்
த/பெ. செபஸ்தியான், சேசுராஜபுரம் அஞ்சல்
அந்தோனியார் வட்டம் , தேன்கனிகோட்டை தாலுகா
கிருஷ்ணகிரி மாவட்டம் , செல் : 8489478354

## நிரந்தர தொங்கு பந்தல்




**படம் விளக்கம்**

1) நைலான் கயறு
2) 6 mm GI வயர்
3) 4 mm GI வயர்
4) சிறு வலயங்கள்

நிலத்தின் மையத்தில் சுமார் 40 அடி உயரமுள்ள கம்பத்தை நட்டு வயலின் நாற்புறமும் 6 அடி உயரம் கொண்ட இரும்பு பைப்புகள் ஊன்ற வேண்டும். இந்த நிலத்தில் உழுவது, பயிர் சுழற்சி செய்வதற்கு எந்த தடையும் இல்லை. மத்தியில் மட்டும் தான் கம்பம். இதை விட்டால் நான்கு வேலிகளில் தூண்கள் அல்லது கம்பங்கள் உண்டு. இதில் பீன்ஸ், பாகல், அவரை, புடலை போன்றவற்றை பயிர் செய்யலாம். இந்த அமைப்பை ஏற்படுத்த ஒரே முறைதான் செலவு. நடுக்கம்பத்திலிருந்து 4–6 எம். எம். தடிமன் கொண்ட ஜி.ஐ. வயர் கொண்டு பந்தல் அமைக்கலாம். ஜி.ஐ. வயருடன் சிறு இரும்பு வலயங்கள் மற்றும் நைலான் கயறு மட்டும் தேவைப்படும். 40 சென்ட் நிலத்தில் 140’x140’ அளவு கொண்ட பாத்தியில் பந்தல் அமைக்கலாம்.

டி. அய்யனார்
த/பெ. தேசிங்கு, நடுப்பட்டு கிராமம், கொலகுடி அஞ்சல்,
திருவண்ணாமலை மாவட்டம்– 606808
செல் : 9791332110, 6380953606

## விமலின் பாரம்பரிய கால்நடை இனங்களும் இயற்கை விவசாயமும்



தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் அருகே அயோத்திபட்டி ரோட்டில் பாரம்பரிய நாட்டு கால்நடை இனங்களை பாதுகாப்பது வாயிலாக இயற்கை விவசாயம் செய்து வருபவர் திரு. ஆர். விமல். இவருக்கு வயது 33. இவர் பி.இ, எம்.பீ.ஏ, படித்து விட்டு ரெடிமேட் ஆடை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். இவரது பூர்விகமான ஊர் நாகப்பட்டிணம் மாவட்டம்

தரங்கம்பாடி வட்டம் திருவிடைகழி கிராமம் ஆகும். இவரது தந்தை டாக்டர். ஜி. ரவி 1965 ஆண்டு முதற்கொண்டே தஞ்சாவூரில் வந்து குடியமர்ந்து விட்டனர். இவரது பூர்வீக ஊரான திருவிடைகழியில் இவர்களுக்கு நிறைய விவசாய நிலம் இருந்தது. அதில் நெல் விவசாயம் செய்து வருவார்கள். அங்குள்ள நிலங்களை விற்று விட்டு தஞ்சாவூரில் வந்து நிலம் வாங்கி விவசாயம் செய்ய முற்பட்டனர்.

இவருக்கு முழுமையாக நெல் விவசாயம் செய்ய விருப்பமில்லை. மரங்கள் மற்றும் கால்நடைகளுடன் கூடிய இயற்கை விவசாயம் செய்ய வேண்டும் என்று எண்ணினார். மேலும் நமது நாட்டு கால்நடைகள் அழிந்து வருவதை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவானது. ஆகவே இயற்கை சூழலுடன் கூடிய பாரம்பரிய கால்நடைகளோடு கூடிய இயற்கை விவசாயம் செய்ய வேண்டும் எண்ணத்தோடு அயோத்திபட்டி ரோட்டில் உள்ள 45 ஏக்கர் தோட்டத்தில் பாரம்பரிய கால்நடைகள் வளர்ப்பு, மரங்கள் வளர்ப்பு என்று பல்வேறு இயற்கை சார்ந்த பணிகள் மேற்கொண்டு வருகிறார்.

**மரம் வளர்ப்பு**

இவரது தோட்டத்தில் தென்னை, மாம்பழம், புளி, நெல்லி, முந்திரி மரங்கள் பயிரிட்டு அவற்றை இயற்கை முறையில் எந்தவித இரசாயன உரங்கள் இடாமல் மரங்களை இயற்கையாகவே வளர விட்டு அதற்கு இயற்கை சாண எரு மட்டுமே கொடுத்து வருகிறார். இந்த மரங்களிலிருந்து கிடைக்க கூடிய மாம்பழம், புளி, நெல்லி, முந்திரி போன்றவைகளை விற்று நல்ல வருமானம் ஈட்டி வருகிறார்.

**பாரம்பரிய கால்நடைகள் பாதுகாப்பு**

இவர் பாரம்பரிய கால்நடைகளான கச்சகட்டி கருப்பு செம்மறிஆடுகள் 50ம், கொடியாடு வெள்ளாடு 20ம், வளர்த்து வருகிறார். மேலும் முர்ரா எருமை மாடுகள் 20ம், உம்பளச்சேரி மாடு 1 காளை மற்றும் 1 பசுவும், குட்டை பசு ஒன்றும் வளர்த்து வருகிறார். இரண்டு பண்ணை குட்டைகள் அமைத்துள்ளார். இவர் கால்நடைகளை தோப்பு நிலங்களிலே தங்க வைத்துள்ளார். மழை காலங்களில் மட்டுமே கொட்டகைகளில் அடைப்பது வழக்கம்.

ஆர். விமல்
அயோத்திபட்டி ரோடு
தஞ்சாவூர்
செல் : 9940033133

## சொக்கலிங்கத்தின் வாழையில் மூடாக்கு



தென்னந்தோப்பில் தென்னைக்கு ஊடு பயிராக வாழையை கடந்த 5 ஆண்டுகளாக திரு. சொக்கலிங்கம் பயிரிட்டு வருகிறார். தென்னை மரங்கள் 25–30 அடி இடைவெளியில் நடப்பட்டுள்ளன. வாழைகன்றுகள் 6 அடி இடைவெளியில் நடப்பட்டுள்ளன. தென்னைக்கு வாய்கால்வழியாக நீர் பாய்ச்சப்படுகிறது. அடுத்தடுத்த வரிசையில் மூடாக்கு போடப்படுகிறது. வாழை மரத்தின் காய்ந்த இலை தென்னைமரத்தின் மட்டை போன்றவைகள் ஒன்றுவிட்டு ஒன்று வாய்க்காலில் (அடுத்தடுத்த வாய்க்கால்) போடப்பட்டுள்ளது. இதனால் மண்ணில் ஈரம் காக்கப்படுகிறது. இந்த மூடாக்கு மக்கி மண்ணுடன் கலந்து உரமாகி விடுகிறது. இதில் இயற்கையாக மண்புழுக்கள் பெருகிவிடும். வாழைக்கன்றுக்கு போடப்படும் குப்பை உரமும், பஞ்சகவ்யா தெளிப்பும் இயற்கை வேளாண்மைக்கு உறுதுணையாக அமைந்துள்ளது. தென்னந்தோப்பில் மூடாக்கு போடப்படுவதால் புற்கள் முளைப்பதில்லை, களைச்செடிகள் உண்டாவதில்லை. வாழையிலிருந்து ரூ. 54.000மும், தென்னையிலிருந்து ரூ. 125,000 மும் வருமானம் கிடைக்கின்றது வாழை போடும் முன்பு தக்கைபூண்டு விதைப்பு செய்து 45 நாளில் செடிகள் பிடுங்கப்பட்டு பசுந்தாள் உரமாக நிலத்தில் இடப்படுகிறது.

வி.வி. சொக்கலிங்கம்
113/32, தேனி மெயின்ரோடு , வீரணலெட்சுமி இல்லம்
விராட்டிபத்து, மதுரை – 16, செல் : 9952204453

## அஞ்செட்டி வட்டாரத்தில் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டை தாலுகா அஞ்செட்டி பகுதியில் உள்ள கிராமங்களில் மகளீர் சுய உதவி குழுக்கள், விவசாயிகள் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் போன்ற அமைப்புகளை உருவாக்கி, சமூகம், விவசாயம் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக அஞ்சட்டியை மையமாக கொண்டு தானம் அறக்கட்டளை பணியாற்றி வருகிறது. தானம் அறக்கட்டளை நபார்டு திட்டத்தின் கீழ் அப்பகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் ஆடு, மாடு வளர்ப்போர் ஆடுகளுக்கு கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி வழங்க ஏற்பாடு செய்திருந்தது. பயிற்சியை மதுரை சேவா சங்கத்தின் பயிற்றுபவர்கள் சி. பாலசுப்ரமணியன் மற்றும் எஸ்.ஜி. செல்வி ஆகிய இருவரும் வழங்கினார்கள்.

கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி 5.3.2018 , 6.3.2018 மற்றும் 7.3.2018 ஆகிய மூன்று தினங்கள் ஏ. புதூர், தாம்சனபள்ளி, சேசுராஜபுரம், மானட்டி, சேங்கொட்டாய் கவுண்டர் கொட்டாய் ஆகிய கிராமங்களில் ஒரு மணி நேர பயிற்சியாக வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் கால்நடைகளுக்கு வரக்கூடிய முக்கிய நோய்களான கோமாரி நோய் (கால் காணை, வாய் காணை) மற்றும் மடி நோய்க்கான வைத்தியத்திற்கான மருந்தினை எவ்வாறு மூலிகைகளை பயன்படுத்தி செய்ய வேண்டும் என்று செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கும் கிராமத்தில் இருக்க கூடிய மகளீர் குழு உறுப்பினர்கள் ஆடு, மாடு வளர்ப்போர் விவசாயிகள் ஆர்வமாக பங்கேற்று பயனடைந்தனர்.

தொகுப்பு : பாலசுப்ரமணியன், சேவா

## திருச்சூர் பாரம்பரிய உத்திகள்

கேரளத்தில் ஆடிமாதம் வந்தவுடன் தசபுஸ்பம் இறைவனுக்குப் படைத்து பெண்கள் சூடுவர். இதனால் நோய் வராமல் பாதுகாக்கப்படுவர் என நம்புகின்றனர். இதன்படி முயல் செவி செடி, கூலான் குரும்னா, முக்குட்டி, திருதாளி, செருளா, நிலப்பனா, முடக்கத்தான் செடி, விஷ்னுகிராந்தி, கையேந்தி போன்றவற்றை முதல்நாள் மாலை கொண்டு வந்து மறு நாள் காலை படைத்து விட்டு சூடுவர். அன்று ஔசதக்கஞ்சி வைத்து சாப்பிடுவர். மட்டை நெல் பச்சரிசிக் குருணையில் நெய் விட்டு கஞ்சி போன்று காய்ச்சுவர். இதில் நிலக் கொடிவிலா கிழங்கு, வசம்பு துண்டு போட்டு காய்ச்ச வேண்டும். இந்த கஞ்சியை அருந்த வேண்டும். இதற்கு முதல்நாள் ஆமணக்கு எண்ணெய் பேதிக்கு சாப்பிடுவர். அன்று ஆரன்முழக்கண்ணாடி என்ற வெண்கலம் உலோகத்தில் செய்யப்பட்டதில் முகம் பார்த்து தேவிக்கு பூஜை செய்வர். மார்கழி (தனுர்) மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் திருவாதிரைக்கஞ்சி சாப்பிடுவர். இதில் எட்டங்காடி எனப்படும் 8 வகையான கிழங்குகளை கூட்டாக சேர்த்து சமைத்து படைத்து உண்பர். இதில் சர்க்கரைவள்ளிகிழங்கு , சேம்பு, கூவக்கிழங்கு, சேனை, சிறுகிழங்கு, பச்சை பாசி பருப்பு, தேங்காய் சேர்க்கப்படும்.

மாடுகளுக்கு கால்குழம்பு புண்களுக்கு சீத்தாப்பழ இலையை அரைத்து மஞ்சள் சேர்த்து இட வேண்டும். அல்லது மஞ்சள் கலரில் பூ பூக்கும் காட்டுத்தகரை செடியை அரைத்து பூச வேண்டும். அல்லது தேக்கு இலை (குருத்து இலை), வெங்காயம் அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவ வேண்டும். மரத்தினால் (பலாமரத்தில்) செய்யப்பட்ட விக்ரகங்கள் பாதுகாக்க தேக்கு மர எண்ணெய் பூச வேண்டும். ஆடிமாதம் பெய்யும் மழை நூல் மாதிரி மெல்லிதாக பேய்ந்தால் குறுமிளகு நன்கு செழித்து காய்க்கும் என நம்புவர்.

### அரிசி மாவு அடை

பச்சரி அரிசி மாவு கொழுக்கடை பதத்திற்கு கலந்து வைத்துக் கொள்ளவும். அடை மாவுக்கு வெல்லம், தேங்காய் துருவல் பலாபழம் மூன்றையும் கலந்து தயார் செய்ய வேண்டும். பின் மாவை வாழையிலையில் வைத்து கட்டி பூரணம் வைத்து இலையை நான்காக மடித்து ஆவியில் வேக வைத்து எடுக்க வேண்டும். பின் இந்த அடையை சிறு தின்பண்டமாக பரிமாறலாம்.

சைலஜா, க/பெ. ஹரிஹர் ஐயர்
பலியக்காரமடம், சிட்டிசேரி, புதுக்காடு, திருச்சூர்
கேரளா, செல்: 9447407976

## டி.ஆர்.கே. நெல்ரகம்

விவசாயி கண்டுபிடித்த நெல்ரகம். இது பிரியாணிக்கு உகந்த சன்னரகம். வயது 130 நாட்கள். சென்ற வருடம் ஆவணியில் நாற்றுவிட்டு புரட்டாசியில் நடவு செய்தேன். 1/2 ஏக்கரில் 500 கிராம் விதை கொண்டு நட்டதில் 2 டன் நெல் கிடைத்தது. இதில் நோய் தாக்கவில்லை. இந்த விதையை தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையிடமிருந்து சேவா மூலம் பெற்றேன்.

ஆர். பெருமாள்
த/பெ. ரெங்கராஜ், 34, ஆலங்குடி அஞ்சல்
குத்தாலம் தாலுகா, நாகப்பட்டிணம் மாவட்டம் – 609801
செல் : 9486835547, 9486525672

## அழகுசுந்தரத்திற்கு விவசாயி விருது



மார்ச் 15 தேதியில் சிவகங்கை அருகே கரும்பு விதை பெட்டி, பூச்சி தாக்காத கரும்பு நாற்று கண்டுபிடித்த வாலிபருக்கு சிறந்த இளம் விவசாயி விருது கிடைத்தது. திருமலையைச் சேர்ந்தவர் இளம் விவசாயி அழகு சுந்தரம் (வயது 32). இளநிலை பண்ணை தொழில் நுட்பம் பட்டம் பெற்ற இவர் 10 ஆண்டுகளாக கரும்பு சாகுபடி செய்கிறார். சாதனை படைக்க எண்ணிய இவர் கரும்பு விதை பெட்டி என்ற புதிய தொழில் நுட்பத்தை கண்டுபிடித்தார். இதன் மூலம் ஏக்கருக்கு 2 டன் கரணையை மிச்சப்படுத்தலாம். தொடர்ந்து சித்த மருத்துவ முறையில் பூச்சிதாக்காத கரும்பு நாற்றுகளையும் கண்டுபிடித்தார். இதன் மூலம் கரும்பில் நோய் தாக்குதல் இருக்காது. மேலும் கிராமம் கிராமமாக சென்று கரும்பு, காய்கறி, மஞ்சள், நாற்று நடவு, நிழல்வலை அமைத்தல் குறித்த பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து வருகிறார்.

இவரது சேவையை பாராட்டி மகேந்திரா டிராக்டர் நிறுவனம் 2018 கான சிறந்த இளம் விவசாயி விருதும் ரூ. 51,000 மும் வழங்கியுள்ளது. கரும்பு விதை பெட்டியை பயன்படுத்தி விவசாயிகளே சுயமாக விதை கரும்பை நடவு செய்யலாம். ஆட்கள் தேவையில்லாததால் செலவு குறையும். பூச்சி தாக்காத கரும்பு நாற்றுகளால் பொருளாதார இழப்பு இருக்காது என்று கூறுகிறார்.

ஆ. ஆழகு சுந்தரம்
த/பெ. ஆறுமுகம்,திருமலை அஞ்சல்
சிவகங்கை மாவட்டம்– 630552, செல் : 9585874197

## மோட்டார் ஸ்டார்டர் சிஸ்டம் கருவிகள்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகா, விஜயமங்கலம் கிராமத்தில் தான் இயங்கி கருவி மூலம் மோட்டார் இயக்கத்தை நிறுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் திரு. செந்தில் கீழ்கண்ட கருவிகளை வடிவமைத்துள்ளார்.

1)Phases - Dolstarters, 2) Phase - Submer Sible Starters 3) Day Run Production Starters 4) Electronic Digital control Starters 5) Phase - Dolstarters 6) Phase- Star Deltastarters 7) Phase - I Phase - GSM Mobile Controlstarters 8) Automatic Tank Level control starters 9) Automatic Level water control starters 10) Phase - 65 Hp to Hp 11) Phase - Dol -6.5 Hp to 100 hp, 12) Servostabilizers - 1 KVA 100 KVA KVA 110V - 600V - 3 Phase. 13) Cycletimers, 14) Solar panels UPs.

நில போர் மற்றும் கிணறு மோட்டார்களுக்கு நவீன எலக்ட்ரானிக் ஸ்டார்டர் சிஸ்டம் தண்ணீர் இல்லை என்றால் ஆப் , ட்ரை ரன், மீண்டும் தானாக இயங்கும் 24 மணி நேரம் செட் டைமர், ஓவர் லோடு ஆப், குறைந்த வோல்டு ஆப்,இன்னும் பல வசதிகள் உள்ளன. மொபைல் பாலேன் மூலம் எங்கிருந்தாலும் கால் செய்து உங்கள் ஸ்டார்டாரை இயக்கலாம் மற்றும் அனைக்கலாம் வசதி ஸ்டார்டர் சிஸ்டம். 600 மீட்டர் வரை உங்கள் ஸ்டார்டர் ரிமோட் மூலம் ஆன், ஆப் செய்யலாம். அனைத்து விதமான 3 பேஸ் மற்றும் சிங்கில் பேஸ் starter system 1 HP முதல் கிடைக்கும்.

வாட்டர் லெவல் கண்ட்ரோலர் சிஸ்டம் உங்கள் வீட்டு மாடியில் உள்ள தண்ணீர் டேங் நிரம்பினால் தானாக மின் மோட்டாரை நிறுத்தும் மற்றும் தண்ணீர் குறைந்தால் தானாக மோட்டார் இயங்கும். கீழ் தொட்டியில் தண்ணீர் இல்லை என்றால் மோட்டார் இயங்காது. மற்றும் பம்பு செட்டில் ஏதாவது பிடிப்பு ஏற்பட்டால் தானாக மின் இணைப்பை தூண்டித்துவிடும் . குறைந்த மற்றும் அதிக மின் ஏற்றம் ஏற்படும் போது மோட்டாரை ஆப் செய்து பாதுகாக்கும்.

ஹாரன் ஒலி சிஸ்டம் உங்கள் வீட்டு மாடியில் உள்ள தண்ணீர் டேங் நிரம்பினால் ஹாரன் ஒலிக்கும்.

மற்றும் உங்கள் இடத்திற்கு உள்ள பிரச்சினைகளுக்கு தேவையான வகையில் water level control system தயாரித்து தரப்படும். சோலார் பேனல் மற்றும் UPS DC volt and AC Volt and AC volt டில் உங்களுக்கு வேண்டிய அளவிற்கு கிடைக்கும்.

GSM செல் போன் செக்யூரிட்டி சிஸ்டம் நீங்கள் உங்கள் வீட்டை பூட்டி விட்டு வெளியூர் செல்லும் சமயத்தில் உங்கள் வீட்டில் யாராவது நுழைந்தால் உங்களுக்கு மற்றும் உங்களுக்கு வேண்டிய நபர்களுக்கு மொபைல் போன் தொடர்ச்சியாக கால் செய்து எச்சரிக்கும்.

தற்போது வீடுகளில் பயன்படுத்த கூடிய பல வீட்டு எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் வந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் தங்கள் வீடு கட்டுமான பணி துவங்கும் போது Security system, video Door

phone , CCTV கேமரா, water level control, Solar power என அனைத்திற்கும் சேர்த்து Sturctured Wiring செய்யவும் அதாவது கட்டிடத்தில் PVC பைப் பதிக்கவும். இதற்கு செலவு மிகவும் குறைவு தான் பின்னால் நமக்கு தேவைப்படும் போது மின் சாதனங்கள் எளிதாக இணைத்து கொள்ளலாம்.

மேலும் பெருகிவரும் சாக்கடையால் ஏற்படும் பிரச்சனைகளை நீங்கள் அறிவீர்கள். ஆகவே சாக்கடை ஒழிப்புக்கு முன் உதாரணமாக உங்கள் வீட்டில் உள்ள RO வாட்டர் இயந்திரத்தில் இருந்து வெளியாகும் கழிவு நீர் மற்றும் வாஷ்பேசின் நீரை செடிகளுக்கு செல்லுமாறு PVC பைப் பதிக்கவும் இதற்கு செலவு மிகவும் குறைவு தான். பின்னால் நமக்கு தேவைப்படும் போது எளிதாக இணைத்து கொள்ளலாம்.

செந்தில்
ஸ்ரீ ஆர்கேட் காம்ப்ளக்ஸ்
பைபாஸ் ரோடு, ஊத்துக்குளி பிரிவு
விஜயமங்கலம் அஞ்சல், ஈரோடு மாவட்டம் – 638 056
செல் : 9600818182

## காமேஸ்வரம் இராஜேந்திரனின் இயற்கை வேளாண் உத்திகள்

நாகப்பட்டிணம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுகா காமேஸ்வரம், வைரவன் காட்டில் வசிப்பவர் திரு. இராஜேந்திரன், வயது 57. இவர் பி.யு.சி படித்தவர் . மேலும் தொலைதூர கல்வி மூலம் பி.காம் பட்டம் பெற்றவர். இவருக்கு 3 மகள் 1 மகன், இவரது மகன் இன்ஜினியர். இவர் 10 ஏக்கர் தோட்டப் பயிர் விவசாயம் செய்து வருகிறார். இவர் தனது 10 ஏக்கர் நிலத்தில் மா, கடலை மற்றும் காய்கறி சாகுபடி செய்து வருகிறார்.

### மாம்பழம் காய்ப்பு அல்லாத காலத்தில் காய்க்க

பொதுவாக மாம்பழம் சித்திரை, வைகாசி மாதங்களில் தான் மாமரம் அறுவடை தரும். ஆனால் இவர் மாமரம் காய்ப்பு அல்லாத காலங்களில் அதாவது கார்த்திகை மார்கழி மாதங்களில் இவரது இயற்கை வேளாண் உத்திகளை பயன்படுத்தி காய்க்க வைக்கிறார். அதன்படி இவர் மாம்பழ சீசன் முடிந்த பிறகு ஆவணி மாதத்தில் கீழ் கண்டவாறு பஞ்சகவ்யா கலவையை மரத்தின் மீது தெளிக்கிறார்.

தண்ணீர் – 100 லிட்டர், பஞ்சகவ்யா – 3 லிட்டர், மீன்எண்ணெய் – 1 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1 லிட்டர். மேற்கண்டவாறு கலவை கலந்து தெளித்த பிறகு மஞ்சள் நிறமான இலைகள் பச்சை நிறமாக மாறி விடும். பின்பு 15 நாள் கழித்து ஒரு முறை பூச்சி விரட்டி கலந்து தெளிக்க வேண்டும். அதாவது தண்ணீர் – 100 லிட்டர், பஞ்சகவ்யா – 2 லிட்டர், பூச்சிவிரட்டி – 3 லிட்டர், மீன் எண்ணெய்– 1/2 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1 லிட்டர். மேற்கண்டவாறு கலந்து தெளிக்க வேண்டும். பின்பு புரட்டாசி மாதத்தில் மரம் பூ வைக்க துவங்கும், பூ வைத்த 15 நாள் கழித்து தண்ணீர் – 100 லிட்டர், பஞ்சகவ்யா – 3 லிட்டர், மீன்எண்ணெய் – 1 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1 லிட்டர். என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். மீண்டும் அடுத்த 15 வது நாளில் பூ வைத்த மரங்களுக்கு மட்டும் மேற்கண்டவாறு பஞ்சகவ்யா கலவை கலந்து தெளிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யும் போது ஏக்கருக்கு 2–3 டன் மாம்பழம் அறுவடை செய்யலாம். மாம்பழ சீசன்களில் மாம்பழம் விலை 1 கிலோ ரூ. 8–15 மட்டுமே. மாம்பழம் அல்லாத சீசன்களில் 1 கிலோ ரூ. 55–70 விலைக்கு விற்கலாம்.

### கடலை சாகுபடி

அடி உரம் சாண எரு ஏக்கருக்கு 3 டிராக்டர் லோடு அடிக்க வேண்டும். அத்துடன் பியூமிக் ஆசிட் குருனை ஏக்கருக்கு 10கிலோ சேர்த்து அடிக்க வேண்டும். விதைத்த 20 நாள் கழித்து பூக்கும் பருவத்தில் தண்ணீர் – 100 லிட்டர், பஞ்சகவ்யா – 11/2 லிட்டர், பூச்சிவிரட்டி – 2 லிட்டர், மீன்எண்ணெய் – 1/2 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1/2 லிட்டர். மேற்கண்டவாறு கலந்து தெளிக்க வேண்டும். பின்பு 30–35 நாட்களில் களை எடுக்க வேண்டும். களை எடுத்த பின்பு தெளிப்பு பாசனம் (Rain gun) பயன்படுத்தி தண்ணீர் இறைக்க வேண்டும். அப்போதுதான் பூச்சி தாக்குதல் குறைவாக இருக்கும். அத்துடன் விதை விழுதல் கூடும். பூ பூக்கும்போது காலையில் தண்ணீர் இறைக்க கூடாது. மாலையில்தான் தண்ணீர் இறைக்க வேண்டும். களை எடுத்த பிறகு தண்ணீர் – 100 லிட்டர், பஞ்சகவ்யா – 2 லிட்டர், மீன் எண்ணெய் – 1 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1 லிட்டர், பூச்சி விரட்டி – 3 லிட்டர்.

மேற்கண்டவாறு கலந்து தெளிக்க வேண்டும். 40 வது நாள் தண்ணீர் – 100 லிட்டர், வேப்ப எண்ணெய் – 1 லிட்டர், மேற்கண்டவாறு கலந்து தெளிக்க வேண்டும். 60 வது நாள் தண்ணீர் – 100 லிட்டர், பூச்சி விரட்டி– 2 லிட்டர், வேப்பஎண்ணெய் – 1 லிட்டர், மீன் எண்ணெய் – 1/2 லிட்டர், பியூமிக் ஆசிட் – 1/2 லிட்டர் மேற்கண்டவாறு கலந்து தெளிக்க வேண்டும். வேப்ப எண்ணெய் கலந்து தெளிப்பதால் பூச்சி தாக்குதல் குறைவாக இருக்கும். வேர் அழுகல் நோய் வராது. 70 வது நாள் மோர் 1 லிட்டர், சூடோமோனஸ் 1 கிலோ இரண்டையும் கலந்து

தெளிப்பதால் இலைப்புள்ளி நோய் கட்டுப்படும். 85–90 நாட்களில் கடலை அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 30 மூடைகள் (ஒரு மூடை 40 கிலோ) மகசூல் கிடைக்கும்.

## எங்கே போகுது விவசாயம்

எங்கே போகுது விவசாயம்
யானை கட்டி போரடித்தோம்
மாடு கட்டி போரடித்தோம்
ஆள் பற்றாகுறையால் அறுவடை
எந்திரம் வைத்து அடித்த நெல்லை
விற்று முதலாய் போட்டு விட்டேன்
விலையில்லா அரிசி வாங்கி வீடு வந்தேன்
அள்ளி போட வைக்கோலும் இல்லை
பிடித்து போட தவிடும் இல்லை
அய்யோ பாவம் கால்நடைகள்
ஏற்பட்டது தீவன பற்றாக்குறை
கால்நடைகள் கசாப்பு கடைக்கு கடத்தப்பட்டன.

நாம் சாப்பிடுவதெல்லாம் கலப்பட பாலைதான் பசுமை புரட்சியில் அதிக விளைச்சல் காண களைக்கும் பூச்சிக்கும் கணக்கில்லா விஷமருந்து கண்டு முதலோ, ஏராளம் களைக்கும், பூச்சிக்கும் கணக்கில்லா செலவினத்தால் விற்று முதலில் லாபமில்லை ஆக ரசாயனம் ஆக்கிவிட்டோம் நிலத்தை தீராத நோய்களுக்கு தலைவாசல் திறந்து விட்டோம் இந்த உடைந்து போன உடம்பை தேற்ற நாம் மீண்டும் போக வேண்டும் இயற்கையை நோக்கி பகட்டாக வாழ்வதாக நினைத்து பாாத்தோம் இயற்கையையே ஆனாலும் நமக்கு கிடைத்ததெல்லாம் அல்லும் பகலும் தீராத நோய்கள் தான் அதிக விளைச்சலால் வறுமை ஒழிந்ததென்பது ஆனால் வந்ததெல்லாம் சங்கடந்தான் விளைந்த தெல்லாம் நஞ்சாகி உண்ட உடல் தீராத நோயாகி விற்று முதல் அனைத்தையுமே வீனடித்தோம் மருந்து நஞ்சு ஏவிந்த மருந்து செலவு இயற்கையோடு ஒன்றி விடு நஞ்சை தவிர்த்திடு வாழும் தலைமுறையை நஞ்சற்ற நாக்கி விடு இயற்கையை நோக்கியோ எள்ளளவும் நஞ்சு இல்லை. இதை நான் மட்டும் சொல்லவில்லை நமது நம்மாழ்வாரும் சொல்லிவிட்டார். பச்சை நிறத்தில் கீரை; பலபலக்கும் பாகற்காய்; நீண்டு வளர்ந்த புடலங்காய் ஆனாலும்; பூச்சி அடித்த கீரையிலும்; புழுவைத்த கத்தரி காயிலும்;
நாம் அடித்த பூச்சி மருந்தின் மிச்சம் மீதி
எங்கோ போகுது விவசாயம்.

தோட்டமெல்லாம் பூக்காடு
மரத்துக்கு மரம் தேன் கூடு
பூக்களிலெல்லாம் தேனீக்கள் கூட்டம்
ஜோராய் நடந்தது அயல் மகரந்தம்
பூச்சி கொல்லி வந்தது அழிந்தது தேனீக்கள் கூட்டம்
காலையில் துண்டு துணியுடன் விவசாயி
ஒவ்வொறு பூவாய் ஒத்தி எடுக்கிறான்
செய்வது அயல் மகரந்தமாம்
எங்கோ போகுது விவசாயம்

வி. ஆர். இராஜேந்திரன்
த/பெ. ராவுத்த கோனார்
1/22, வைரவன் காடு, காமேஸ்வரம் அஞ்சல்
திருப்பூண்டி வழி, கீழ்வேளூர் தாலுகா
நாகப்பட்டிணம் மாவட்டம் – 611 110
செல் : 9578573197

## திருமெய்ஞானம் சுப்பையனின் இயற்கை பழ வகைகள் சாகுபடி



நாகப்பட்டிணம் மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் திருக்கடையூர் அருகே திருமெய்ஞானம் கிராமத்தில் வசிப்பவர் திரு. சுப்பையன் வயது 75. இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 1 மகன் 2 மகள் மகன் சென்னையில் ஐடி கம்பெனியில் வேலை பார்க்கிறார். இவரது பூர்வீகமான சொந்த ஊர் வேதாரண்யம் அருகே உள்ள புஷ்பவனம். இவர் இங்கு வந்து 35 ஆண்டுகளாகிறது. இவருக்கு திருமெய்ஞானத்தில் 30 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இவர் இந்த நிலத்தில் மா – 10 ஏக்கர், கொய்யா 11/2 ஏக்கர் மாதுளை – 11/2 ஏக்கர்,

சப்போட்டா – 11/2 ஏக்கர், நெல்லி – 1/2 ஏக்கர் ஆரஞ்சு 1/2 ஏக்கர், திராட்சை 1/4 ஏக்கர். போன்ற வகையில் பழ வகை சாகுபடி செய்து வருகிறார். இவர் தனது நிலத்திற்கு இயற்கை உரமான சாண, எரு ஏக்கருக்கு 3 டிராக்டர் போட்டு உழுது விடுகிறார். மேற் கொண்டு எந்த விதமான உரமும் இடுவது இல்லை.

**திராட்சை சாகுபடி**

தரங்கம்பாடி பகுதியில் டேனிஷ்காரர்கள் ஆட்சி காலத்தில் திராட்சை சாகுபடி செய்து சிறப்பு பெற்றிருந்தது. தரங்கம்பாடி திராட்சை ருசியாக இருக்கும் என்ற பெயர் இருந்தது. இதை இவர் மனத்தில் கொண்டு சுமார் 3 வருடமாக பன்னீர் திராட்சை சாகுபடி செய்து வருகிறார்.

ஏ, சுப்பையன்
த/பெ. அழகப்பன், ஓ,என்,ஜி,சி ரோடு
திருமெய்ஞானம் அஞ்சல்,
திருக்கடையூர் வழி , தரங்கம்பாடி தாலுகா
நாகை மாவட்டம் – 609311 , செல் : 6381613324

## தீவனக்கரணைகள் நடவுமுறை

தீவனப்பயிரான கோ, 3 அல்லது கோ 4 ரகங்களான தீவன உற்பத்தியை பெருக்க நாம் தீவனக்கரணைகளாக அதாவது 2 கரனைகள்(பரு) கொண்ட தட்டையை ஒரு பருவை நிலத்தின் உள்புறத்திலும் (வேர் இறங்குவதற்காக) இன்னொரு பரு, பூமியின் மேற்பகுதி குருத்து என்று சொல்லக்கூடிய தீவனதட்டை உற்பத்தியாகும் பகுதி மேற்பகுதியில் இருக்கும் படியாக நடும் முறை தான் நடைமுறையில் உள்ளது. இந்த முறையில் நடும் போது 60 முதல் 70 சதவீதம் மட்டுமே முளைத்து பயன் தருகிறது. மீதி 30 சதவீதம் காய்ந்து விடுகிறது. இதை தவிர்ப்பதற்காக 100 சதவீத கரனைகளும், (பருக்கள்) முளைப்பு ஏற்படுத்தும் முறைக்காக தீவனக் கரனைகளை ஒவ்வொரு பருக்களாக இருக்கும் படி வெட்டி எடுத்து, அவற்றை 2 அடி நீளம், 11/2 அடி அகலம், 11/2 அடி ஆழம் கொண்ட குழியில் கரனைகளைப் போட்டு அவற்றின் மீது ஈரம் ஏற்படுத்துவதற்காக அதன் மேல் தண்ணீரை ஊற்றி நனைத்து, அதன் மீது பழைய உரச்சாக்கு அல்லது சிமெண்ட் சாக்குகளை விரித்து, அதன் மேல் காற்று புகாமல் இருப்பதற்காக, மண்ணை இட்டு மூடிவிட வேண்டும். இதனை ஒரு வாரம் கழித்து மூடிய மண்ணை அகற்றி, சாக்குகளையும் அகற்றி பார்த்தோமானால், குழியினுள் போட்ட கரணைகள் அனைத்தும் அடியில் வேர் பகுதியும், மேற்பகுதியில் குருத்தும் உள்ளவாறு இருக்கும். இவற்றை எடுத்து, தீவனப்புல் சாகுபடி செய்யும் நிலத்தில் முதல் நாள் தண்ணீர் பாய்ச்சி மறு நாள் பொலபொலப்பான மண் தரையில் வேர்பகுதி மட்டும் உள்ளே இருக்கும் படியாக நடவு செய்தால் 100 சதவீதம் கரணைகளும் முளைத்து வரும்.

மு, பாலுச்சாமி
த/பெ. முத்துலிங்கம் நாயக்கர்
2/426, அரண்மனைத் தெரு
கண்டமனூர், செல் : 9514546757

## மண்புழு வளர்ப்பும் மூடாக்கும்

மண்புழுக்களை வெளியிடங்களுக்கு அனுப்பும் சமயம்



ஒரு பிளாஸ்டிக் தட்டில் இட்டு அதில் பிண்ணாக்கு, பப்பாளி, சாணி கரைத்து 3 நாட்கள் மட்கவிட்டு இதில் 20 மண்புழுக்களை விட வேண்டும். இந்த மண்புழுக்கள் 3–4 மாதங்களில் 1 தட்டில் 4000 ஆக பெருகிவிடும். இதை வாகனத்தில் ஏற்றி வெளியிடங்களுக்கு கொண்டு செல்லலாம்.

நிலத்தில் மூடாக்கு இடுவதால் நல்ல ஈரம் பாதுகாக்கப்படுகிறது. எனது நிலத்தில் 1998 லிருந்து மூடாக்கு போட்டு வருகிறேன். தென்னை, மல்பெரி, கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு மூடாக்கு போட்டு வருகிறேன். கரும்பில் 5 அடி பார் இடைவெளியில் கரும்பு சோகை வைத்து முடாக்கு செய்கிறேன். தென்னை மரத்திலிருந்து 10 அடிதள்ளி 31/2 அடி ஆழத்தில் குழி எடுத்து மரங்களின் கிளைகள் தழைகளை மூடாக்கு போட்டு விடுகிறேன். எங்கள் நிலத்தில் 500 டன்கள் மரக்கழிவுகளை மூடாக்கு போட்டு இருப்பதால் நிலம் மிருதுவாயும். பொலபொலப்பாயும் உள்ளது. நீர் தேவை குறைகிறது.

இரவி
உப்புபள்ளம், கெஞ்சனூர் அஞ்சல்
சத்தியமங்கலம் தாலுகா
ஈரோடு மாவட்டம்
செல்: 9443724779

## கிருஷ்ணசாமியின் மூலிகை வைத்தியம்



திரு. கிருஷ்ணசாமி (வயது 66) 4 வது வரை படித்து விட்டு கடந்த 40 வருடங்கலமாக மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். தேனிக்கு அருகேயுள்ள காமாட்சிபுரம் கிராமத்தில் வசித்து வருகிறார். இவரது குடும்பத்தில் பல தலைமுறைகளாக மூலிகை வைத்திய முறை பின்பற்றப்படுகிறது. இவர் கடைபிடிக்கும் வைத்திய முறைகள் பின்வருமாறு

**மசால் உருண்டை தயார் செய்தல்**

கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு மசால் உருண்டை போடுவதால் வயிறு உப்பிசம், தீனி திண்ணாமை, நீர் குடிக்காமை, மாசி போடாமால் இருந்தால் போன்ற பிரச்சனைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். இதில் ஆவாரம், நிலவாகை, கொளுஞ்சி, தும்பை, கொல்லங்கோவைகிழங்கு, சோற்றுக்கற்றாழை , புளியம்பிரண்டை போன்றவற்றுடன் கடை சரக்கு ( சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், வேப்பெண்ணெய், தேங்காய், வெங்காயம், பூண்டு சேர்த்து அரைத்து உருண்டை பிடித்து தர வேண்டும்). இதனை குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு முறையாவது கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு நாக்கின் அடிப்பகுதியில் உள்ள பச்சை நரம்பின் முனை பகுதியை குத்தி விட வேண்டும் . இதனால் கெட்ட இரத்தம் இறங்கும். மொழியில் நீர் கட்டாது.

**மூட்டுவலி தைலம்**

வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், புங்கை எண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் சேர்த்து இதில் கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், பெருஞ் சீரகம், திப்பிலி சேர்த்து நல்ல பதத்திற்கு வரும் வரை காய்ச்ச வேண்டும். இதனை வலியுள்ள இடங்களில் பூசி வர வேண்டும்.

**கூந்தல் தைலம்**

தேங்காய் எண்ணெய்யில் ஆடு திண்ணாபாலை, சோற்றுக்கற்றாழை , செம்பருத்தி சேர்த்து ஒரு பாட்டில் வைத்து கொள்ள வேண்டும். இதனை கூந்தலுக்கு எண்ணெயாக பயன்படுத்தலாம்.

**குடற்புழு, விஷகடிக்கு**

கொல்லங்கோவை கிழங்கு தூளாக்கி தர வேண்டும்.


கிருஷ்ணசாமி
த/பெ, சோனை முத்து
261/2 414, அம்பேத்கார் காலனி
காமாட்சிபுரம், சீப்பாங் கோட்டை
தேனீ – 625520


## குஞ்சு பொரிக்கும் இன்குபேட்டர்



அரியலூர் மாவட்டம் தத்தனூர் குடிக்காடு கிராமத்தில் வசித்து வரும் சுரேஷ் (வயது 32) கோழிகுஞ்சு பொரிக்கும் இன்குபேட்டர் வடிவமைத்துள்ளார். இவர் இதுவரை 90 கருவிகள் விநியோகித்துள்ளார். இந்த இன்குபேட்டர் 37.5 சென்டிகிரேட் உஷ்ணத்தை தர உள்ளே பல்பு (90 வாட்ஸ்) சென்சார் ஸ்விட்ச் மற்றும் உள்ளே தகுந்த நீர்பதத்தை கூட்ட (50–55 சதவீதம்) குறைக்க 5 தட்டுகள் வைத்து தண்ணீர் ஊற்றியும் காலியாகவும் இருக்க முறைப்படுத்தியுள்ளார். இதில் 22 நாட்களில் கோழி முட்டைகள் 80 சதவீதம் அளவு பொரிக்கும் நிலை கொண்டது. இந்த இன்குபேட்டர் 2' நீளம், 11/2' அகலம் 11/2 அடி உயரமும் கொண்டது. இதன் விலை ரூ. 7,000 ஆகும்.


ஆர். சுரேஷ்
தத்தனூர் குடிக்காடு, உடையார்பாளையம் தாலுகா
அரியலூர் மாவட்டம் , செல் : 8098455485

## அதிக விளைச்சல் தரும் பி.வி.எம் முருங்கை

பள்ளபட்டி அழகர்சாமி ஒட்டு முருங்கை வின்பதியன் கன்றுகள் மூலம் இதுவரை 30,000 விவசாயிகளுக்குத் தரப்பட்டுள்ளன. 1 கோடிக்கு மேலாக கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு நல்ல விளைச்சல் எடுத்து வருகின்றனர். இதற்கு ''சிருஷ்டி சம்மான்'' விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். மேலும் தொடர்பு கொள்ள:

அ.பெ. அழகர்சாமி
முருங்கை விவசாயி
6/39, தெற்கு தெரு, பள்ளபட்டி அஞ்சல்
நிலக்கோட்டை தாலுகா , திண்டுக்கல் மாவட்டம்
செல் : 9865345911, 9791774887

## மீன் குஞ்சுகளிடமிருந்து ஆமையை வெளியேற்றுதல்



திருவாரூர் மாவட்டத்தில் பல குளங்களில் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மீன் குஞ்சுகளை ஆமைகள் உணவாக கொள்ளும். ஆமைகளை வெளியேற்ற ஓர் எளிய வழியை ராம் கடைபிடித்து வருகிறார். இதன்படி ஒரு வலையை கொண்டு படத்தில் கட்டியபடி ஓர் இரும்பு கூண்டிற்குள் நீரில் உள்ள மீன்கள், ஆமைகளை கொண்டு செல்கிறார். இந்த இரும்பு கூண்டு கம்பிகள் 1–2 அங்குலம் இடைவெளி உடையதாக இருக்கும். இந்த இடைவெளிகளுக்குள் மீன் குஞ்சுகள் எளிதாக சென்று விடும். ஆனால் ஆமைகள் நேராகத்தான் செல்லும். கிராஸ்பன்னி போக தெரியாது. அதாவது செங்குத்தாக போக தெரியாது. இவ்வாறு அடைபட்ட ஆமையை வெளியே எடுத்து விடலாம்.

திரு. ராம்
காளியகுடி
திருவாரூர் மாவட்டம்
செல் : 9788776381

## பிற மாநில உத்திகள்

### பயிர்களில் பூச்சிக்கட்டுப்பாடு



பயிர்களைத் தாக்கும் பூச்சிகளுக்கு ஹமிர்பாய் என்ற விவசாயி கீழ்கண்ட மூலிகைகளை 21/2 கிலோ அளவு எடுத்து 200 லிட்டர். நீரில் ஒரு வாரம் புளிக்கவிடுகிறார். சீத்தப்பழ செடி இலை, வேப்பிலை, பீநாரிசங்கு, ஆடாதெடை இலை, எருக்களை ஊறிய நீரை வடிகட்டி இத்துடன் 15 லிட்டர் நீர் சேர்க்க வேண்டும். இதனை ஓர் ஏக்கர் நிலத்தில் உள்ள பயிர்களுக்கு தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

ஹம்ரிபாய் ராம்பாய் பாபரியா ஜுனாகட், குஜராத்
தேனீ – (282349)

### புண் ஆற

கால்நடைகளில் புண் ஆற பட்டுச்செடியின் இலைச்சாறை பிழிந்து விட வேண்டும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.

பிக்காஜி கன்டிஜி தாகூர், சீத்தாபூர், அஹமதாபாத் மாவட்டம் , குஜராத் தேனீ – (282351)

### நிலக்கடலையில் தோன்றும் வெள்ளை புழுக்களுக்கு

நிலக்கடலைப் பயிரில் மண்ணில் வாழும் வெள்ளைப்புழுக்களினால் பயிரின் வேர்பாகம் சேதாரமாகி பயிர் காய்ந்து விடும். இதற்கு திருகுகள்ளி, சோற்றுக்கற்றாழை தலா 21/2 கிலோ அளவு எடுத்து 200 லிட்டர் நீரில் ஒரு நாள் முழுவதும் புளிக்க விட வேண்டும்.

இதனை வடிகட்டி நிலத்தில் வாய்க்கால் நீரில் கலந்து விட வேண்டும். இதனை மகேஷ்பாய் என்ற விவசாயி பவநகர் மாவட்டத்தில் கடைபிடித்தார். சண்டுபாய் என்பவர் வேப்ப எண்ணெய், மாட்டு மூத்திரம், ஒரு மாதம் புளித்த மோர் சேர்த்து கட்டுப்படுத்தியுள்ளார்.

தேனீ – (282360)

### காய்கறி செடிகளில் வளர்ச்சி கூட

காந்தாரி மிளகாய் என்ற சிறிய ஊசி மிளகாய் பழுங்கள் 10 எடுத்து அரைத்து வளர்ப்பு முயல்களின் மூத்திரம் சேர்த்து 10 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். பின்னர் மறுநாள் இதனுடன் பார் சோப்பு சிறிது சேர்த்து கலக்கி இத்துடன் 10 மடங்கு நீர் சேர்த்து பயிருக்குத் தெளிக்க பூச்சி கட்டுப்படும். வளர்ச்சி கூடும்.

மகேஷ் சுகுமாறன், வரிக்கல் இல்லம், ராஜகுமாரி தெற்கு, இடுக்கி, கேரளா தேனீ – (282347)

### மழைக்கால கழிச்சலுக்கு



மழைக்காலத்தில் கால்நடைகள் பச்சை புல்லை நன்கு மேய்ந்து வரும். இதிலுள்ள கிருமிகளினால் கழிச்சல் ஏற்பட வாய்ப்புண்டு கழிச்சல் கண்டால் பொரசு மரம் (Butea monsperma) பட்டையை நீரில் 2–3 மணி நேரம் ஊற வைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

ரத்னிபென் கொர்மபாய் பாட்டில்யா, பாட்வியா, தஹோத் மாவட்டம் தேனீ – (282352)

### நிலக்கடலையில் கரும்புள்ளி நோய்க்கு

நிலக்கடலை பயிரில் இலைகளில் கருப்பு மற்றும் மஞ்சள் நிற வட்டவடிவமான புள்ளிகள் தோன்றி பயிர் கருகிவிடும். இதற்கு கள்ளிச் செடியை (முட்கள் நிறைந்தது) வெட்டி நிலத்தை சுற்றி 2 அடி அகலத்தில் போட்டு விட்டால் நோய் பரவாது. கள்ளிப்பால் 10 லிட்டருக்கு 250 மி.லி. கலந்து தெளித்தாலும் நோய் கட்டுப்படும்.



ரமனாபாய் மனிபாய்படேல், ஜாம்னி, கேடா மாவட்டம். குஜராத் தேனீ : (282350)

### கோழிகளுக்கு கற்றாழைச்சாறு



முள் கற்றாழையை முள் நீக்கி சிறு துண்டுகாளாக்கி நறுக்கி ஆட்டி வரும் சாற்றினை கோழிகளுக்குத் சில நாட்கள் கொடுத்து வந்தால் கோழிக்கு வரும் நோய்களிலிருந்து காக்கலாம்.

ரேஷாம்பென் நாக்ரிபாய் பரியா, தேவ்கர் பரியா, கஹோத் மாவட்டம். குஜராத் தேனீ : (282363)

## வாசகர் வட்டம்

### நீரியல் சிந்தனைக் களஞ்சியம்

தண்ணீரைச் சிக்கனமாய் செலவழி என்று தான் உப்பு நீரை வெளியிலும் நன்நீரை உள்ளேயும் இறைவனால் இயற்கையாகத் தரப்பட்டது இருந்தாலும் நீங்கள் துளையிட்டு அழிப்பது இயற்கையையே அழிப்பதாகும். தாய் தந்தை குரு மட்டும் தெய்வமல்ல – விவசாயம் செய்வோரும் தெய்வமே. நம் மண்ணின் உணவு நமக்கு என்றும் பலன் – அயல் மண்ணின் உணவு நமக்கென்றும் அச்சம். ஒவ்வொரு கைப்பிடி உணவு உண்ணும் போது உழைக்கும் விவசாயிகளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் ஒருபோதும் உணவை வீணடிக்கமாட்டீர்கள். மரம் நடுவோம். மழை பெறுவோம்.பாரம்பரிய சிறுதானிய

பயிர்களை பன்மடங்கு உற்பத்தி செய்வோம். நீடித்த நிலைத்த வாழ்வுக்கு ''இயற்கை வேளாண்மை'' செய்திடுவோம். மின்சாரத்தையும், தண்ணீரையும் ''சிக்கனமாக'' பயன்படுத்துவோம்.

என். முத்தையா
தேவகோட்டை, வட்டார வயலகம்
செல் :9095089912, 9943415953

**பயன் தரும் பல உத்திகள்**

வெள்ளாடு வளர்ப்பது என்பது மிகவும் எளிய வழி ஆனால் அதற்கு எந்த உபாதையும் வராது வராமல் மிகவும் தெளிவாக பார்த்துக் கொள்ள வேண்டும் ஏன் என்றால் பிளாஸ்டிக் கழிவுகளை தின்று விட்டால் பிளாஸ்டிக் கழிவுகள் நாக்கில் அதன் சுருசுருப்பான பகுதியில் ஒட்டிக் கொள்ளும் 2 நாட்கள் எந்த விதமான ஆகரம் சாப்பிடாது பின்பு கழிச்சல். பின்பு இறந்து விடும். அப்படி ஆடு டல்லாக நின்றால் உடனே அதனது வாயினை பிளந்து நாக்கினை டார்ச் அடித்து பார்த்து பின்பு வடை சுடும் கம்பியின் நுனியில் சிறிதாக வளைத்து ஆட்டின் நாக்கில் கல் உப்பு தடவ வேண்டும். நாக்கில் நீர் சுரக்க ஆரம்பித்தவுடன் கம்பியினை மெதுவாக நாக்கில் வைத்து நீவி விட வேண்டும். நீர் அதிகம் வடியும் போது அந்த பிளாஸ்டிக் இளக ஆரம்பிக்கும். கம்பியினை வைத்து மெதுவாக சுழற்றி அதனை எடுத்து விட்டு பின்பு பச்சை தண்ணீரால் வாயினுள் ஊற்றிய பின்பு 1 நாள் கழித்து (பிரண்டை முருங்கை கீரை) இரண்டு ஒன்றாக கட்டி மெதுவாக சாப்பிட கொடுக்க வேண்டும். முன்பு நாக்கில் கல் உப்பு தடவ வேண்டும். வெள்ளாடு நம்மிடம் 1 அல்லது 3 உள்ளது என கொள்வோம். கண்டிப்பாக 1 கிடா ஆடு ஒன்று நம்மிடம் இருக்க வேண்டும். 1 கிடா ஆடு 18 முதல் 24 குட்டிகள் போடுவதற்கு ஏற்ற கிடாவாக மாறிவிடும் . 2 வருடத்தில் அந்த கிடாவிற்கு புதியதாக உள்ள கிடா வைத்துக் கொள்ள வேண்டும். நமது பெட்டை ஆடுகள் போடுகின்ற குட்டியில் ஏற்றதாக வைத்துக் கொண்டு மற்ற கிடாக்களை விற்று விட வேண்டும். மழைகாலங்களில் கிழக்கு மேற்காக கொட்டகை போட வேண்டும். பின்பு இடம் ஈரம் ஆகி விட்டால் ஆடுபடுக்காது. அதற்கு மூங்கில் தட்டி அடித்து அதன் மீது ஏறி நிற்கும்.

கொடி முருங்கைக்காய் விதை ரூ. 200 க்கு வாங்கி 1 ஏக்கர் நிலத்தில் நட்டால் 4 அடி நீளம் வளரும். ஒரு முருங்கைகாய் வைகாசி மாதத்தில் அதனை விதைத்தால் 3 மாத இடைவெளியில் காய் காய்க்க ஆரம்பித்து விடும். புரட்டாசி முதல் மார்கழி தை மாதம் வரை காய்க்கும். திருமண சீசன் சுமார் 20 கல்யாணம் மண்டபத்தில் புக் செக் மேனேஜர் வசம் பெண் விட்டார் போன் வாங்கி முருங்கை சப்ளை செய்தால் ரூ. 20,000 – 30,000 வரை 6 மாதங்கள் சம்பாதித்து விடலாம். செலவு கம்மி. அதன் கீரைகளை பசு மாட்டுக்கும், வெள்ளாட்டுக்கும் கொடுத்தால் நல்ல நோய் எதிர்ப்பு சத்து கிடைக்கும். முள்ளங்கி போல தான் சிகப்பு பீட்ரூட் இதுவும் விதைப்பண்ணையில் வாங்கி 2–2 விதை ஒரு கை அளவு இடை வெளிவிட்டு நிலத்தில் 1 ஏக்கர் போட்டால் சர்வ சாதரணமாக ரூ. 20,000 – 25,000 கிடைக்கும். வேப்பம் புண்ணாக்கு ஆட்டு புழுக்கை இரண்டையும் சம அளவு நைய அரைத்து முதலில் நிலத்தில் வீச வேண்டும். பின்பு மேலாக உழுது பின்பு தண்ணீர் பாய்ச்சி 7 முதல் 8 நாட்கள் கழித்து விதை வளர்ந்து பின்பு ஒரு கைப்பிடி அளவு ஆட்டு புழுக்கை 5 அங்குலம் இடைவெளியில் அதனை விதை பக்கத்தில் கொஞ்சம் கொஞ்சம் வைத்து விட்டு காலை அல்லது மாலை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வெயில் நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச கூடாது. இதனை காலை 8 முதல் 9 மணிக்குள் செய்தால் மகசூல் சிறப்பாக இருக்கும். ஊட்டி பீன்ஸ் நமது ஊரில் உள்ள பீன்ஸ் 1/2 அடிஸ்கேல் நீளம் இருக்கும். ஊட்டி நீலகிரி, கோத்தகிரி பீன்ஸ் 11/2 அடிஸ்கேல் முதல் 2 அடி நீளஸ்கேல் அளவு வளரும். இதற்கு விதை மேட்டுப்பாளையத்தில் விதைப்பண்ணையில் கிடைக்கும். அதனை நமது ஊரில் விளைவிக்கலாம். முதல் தரம் ரூ. 200க்கு விதை வாங்க வேண்டும். மண் ஊட்டசத்து சாணம் எரு (டிராக்டர் கொண்டு உழுது பின்பு) தெளிக்க வேண்டும். மண்ணின் வளம் பெருக ஆட்டு புழுக்கை வாரத்திற்கு ஒரு முறை 4 வாரம் போட்டால் 35 நாளில் இருந்து பீன்ஸ் பறித்து விற்க ஆரம்பிக்கலாம். உடலுக்கு அதிக நீர் சத்து தருவது. இது இதயத்துக்கு சிறந்தது.

மண் விளைநிலங்களில் சரியில்லாமல் இருக்கும் பட்சத்தில் சாணி எரு (மாட்டு சாணம்) முதலில் 1 ஏக்கர் நிலம் உள்ளவர்கள் 1 டிப்பர் சாணி (600 ரூ) எரு முதலில் நிலத்தில் 2 சித்தாள் விட்டு முழுதும் தூவி விட்டு பிறகு குபேட்டா கை டிராக்டர் கொண்டு 4 லிட்டர் மீசல் போட்டு (300 கூலி) டிராக்டர் மேலாக 2வது பின்பு தண்ணீர் விட வேண்டும். பின்பு 4 முதல் 5 நாட்கள் கடந்து மறுபடியும் 1 டிப்பர் சாணி எரு (600 ரூ) தெளித்து விட்டு பின்பு நடவு செய்யவும் கரும்பு என்றால் 1 ஏக்கருக்கு 40 முதல் 45 டன் வரை கிடைக்கும். உழைக்க வேண்டியது 1 மாதம்

செலவு 10 முதல் 15 ஆயிரம் 10 மாதம் கழித்து வெட்டுவதற்கு 1 மாதம் மகசூலில் கிடைக்க வருமானம் ரூ.செலவுத் தொகை போக சுமார் 1 லட்சம் கிடைக்கும். இடைப்பட்ட 10 மாதத்தில் நாம் வேறு வேலைக்குச் சென்று பணம் ஈட்டலாம். மேலும் வெண்டைக்காய் விதை ரூ. 60 க்கு வாங்கி நிலத்தில் கொத்தவரங்காய் விதை ரூ. 60க்கு இரண்டையும் நிலத்தில் 2–2 விதையாக நட்டால் கிடைப்பது 1 மாதத்தில் 2 முதல் 3 ஆயிரம் கிடைக்கும் துவரையும் சேர்த்து போட வீட்டிற்கு தேவையான காய்கறி பருப்பு மீதம் அக்கம் பக்கத்தில் விலைக்கு கொடுத்து விடலாம். நிலத்துக்கு உரியவர் பாடுபட்டாலே பலன் கிடைக்கும் உடலும் வலிமை பெறும் நோய் நம் உடலில் அறவே வர வாய்பிள்ளை 1 ரூ பாய்க்கு பாவை விதை வாங்கி நமது நிலத்தின் உரமாக போட்டால் போதும் அது சுமார் 2 ஆயிரம் கிடைக்கும் இதற்கு செலவு ஏதும் கிடையாது ஆட்டு புழுக்கை மட்டும் தூவி விட்டால் போதும் பொங்கல் கரும்பு அதில் நீர்சத்து இருக்கும் ஆனால் வெயிட் இருக்காது. ஆலைக்கு கரும்பில் வெயிட் மட்டும் நீர்சத்தும் இருக்கும் பணம் கொட்டா கொட்டு என்று கொட்டும் கட்ட கரும்பு இரண்டாம் பருவம் மூன்றாம் பருவம் இதற்கு செலவு கிடையாது ஆனால் லாபம் நமக்கு தனசேகரன் மாடுகள் வாங்க வேண்டும் என்றால் 10 மாத கன்றுக்குட்டியாக வாங்க வேண்டும். அதுவும் 5000/ 5 ஆயிரம் (அல்லது) 5,500/= ரூபாய்க்கு வாங்க வேண்டும். அதனை 18 மாதம் ஆன பிறகு சினை ஊசி போட வேண்டும். சரியாக 21/2 வயதுக்குள் கன்று ஈன்று விடும் அப்பொழுது நமது (மாட்டின் +கன்று) சேர்த்து ரூ. 30,000 முதல் 35,000 /= ரூ வரை விலை போகும் அப்படியே விற்க வேண்டும் என்றால் பசு கன்று குட்டி என்றால் அதனை வைத்துக் கொண்டு கன்று ஈன்ற 3ம் மாதம் மாட்டுக்கு சினை ஊசி போட்டு விட வேண்டும். 10 மாதம் பால் கறக்கும் நமக்கு கன்று குட்டி மிச்சம் நலம் போட்ட முதலில் குறுகிய காலத்தில் ஒரு சிறந்த வருவாய் கிடைக்கும் என்பதில் ஐயம் கிடையாது. ஏழைகளின் பசு என்பது வெள்ளாடு வளர்ப்பு 2 வருடத்திற்கு 3 முறை குட்டிகள் போட்டு நாம் கை செலவுக்கு கடன் படாமல் காலம் கடத்த சிறந்த வழி வெள்ளாடு வளர்ப்பு வெள்ளாட்டு பால் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.

நா. தனசேகரன்
2/41, அக்ரஹாரம், சூலமங்கலம்
பசுபதிகோவில் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்
செல் : 9715109946

## மாட்டு காய்ச்சலுக்கு



அறிகுறிகள்: நான்கு கால்களும் நடுங்கும்; உடல் புல்லரிக்கும்; உடம்பு அதிகமான வெப்பமாக இருக்கும்; வாய், கண்களிலிருந்து நீர் வடியும்; தீவனம் தின்னாது; பால் கொடுக்காது. வைத்தியம்: வேப்ப கொட்டை 200 கிராம் எடுத்து ஒரு மண்பானையில் தீ கங்கு எடுத்து அதில் 200 கிராம் வேப்ப கொட்டை இட்டு இதில் வரும் புகையை மாட்டுக்கு காட்ட வேண்டும். மஞ்சள் பொடி, மிளகு, பூண்டு, ஓமம் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து அரைத்து சுடு தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இத்துடன் அரிசி மாவு அல்லது கம்பு மாவு 1/2 கிலோ எடுத்து கஞ்சி போன்று காய்ச்சி கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு குடிப்பதற்கு காய்ச்சி அறிய தண்ணீரை மட்டும் கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு காய்ந்த தட்டை அல்லது வைக்கோல் போடலாம். பச்சை புல், போட கூடாது.

எஸ்.எம். ஆறுமுகம்
எழுவணி, முக்குளம் அஞ்சல்
திருப்புவனம் வழி
விருதுநகர் மாவட்டம்
செல் : 9943292958

## பாரம்பரிய வேளாண்மை உத்திகள்

1. எருமை மாட்டுத்தயிர் 1 மடங்கு எடுத்து 5 மடங்கு நீர் சேர்த்து 4 நாட்கள் புளிக்க விட வேண்டும். இதில் கத்தரிக்காய் மிளகாய் விதைகளை 1/2 மணி நேரம் வைத்து நடவு செய்ய வேண்டும். முளைப்புதிறன் அதிகரிக்கும்.

2. சீமக்கருவேல் காய் இவைகளை 1 கிலோ எடுத்து அரைத்து 5 லிட்டர் நீரில் கலந்து விட வேண்டும். இதிலிருந்து 20 மி.லி கரைசல் எடுத்து 1 லிட்டர் நீரிலும் கலந்து பயிர்களுக்கு தெளித்தால் சாறுஉறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படும்.

## கால்நடைகளுக்கு மூலிகை மசாலா உருண்டை

24.8.2015– 25.8.2015 வரை 2 நாட்கள் ஆரோவில்லில் எஸ்.எல்.ஐ. (Sustainable Livelihood Institute) மூலம் பயிற்சி தரப்பட்டது. இதில் “சேவா” தொண்டு நிறுவனத்திலிருந்து பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இதன்படி 2 மாதங்களுக்கு ஒரு முறை மூலிகை மசாலா உருண்டை தயார் செய்து எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு ஓர் உருண்டை ரூ. 10 க்கு கொடுத்து வருகிறேன். இதை கால்நடைகளுக்கு தருகின்றனர். கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது போல மசாலா உருண்டை கொடுப்பது சிறந்ததாக உள்ளது. என்னுடைய ஆடுகள் கழிச்சலுக்கும் மசாலா உருண்டை கொடுத்தபின் குணமானது. எங்கள் குழு மூலம் பசும்பால் விநியோகம் செய்து வருகிறோம்.

லேகேஸ்வரி , வெள்ளாங்கோவில்
கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்
செல் : 9443847313

## கறி கோழி வெட்டும் கருவி

தற்பொழுது வேலையாட்கள் கிடைப்பது மிக அரிதாக உள்ளதால் கறி கோழிகளை துண்டு துண்டாக வெட்டி பாடம் செய்வதற்கு ஒரு கருவியை வடிவமைத்துள்ளேன். இது ஒரு குதிரை திறன் கொண்ட மோட்டார் மூலம் இயங்கப்படுகின்றது. இதனுடைய விலை ரூ. 20,000ம் ஆகும். இதிலேயே வேறு ஒரு மாடல் ரூ. 1,00,000 ல் செய்ய உள்ளேன்.

சி. ராமசாமி, 6/36, திம்மநாயக்கன்பாளையம்
மொரட்டுப்பாளையம் அஞ்சல், ஊத்துகுளி
திருப்பூர் – 638732, செல் : 8838214832

## கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி

திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவ கல்லூரியில் மே 10–11 ல் 2 நாட்கள் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் கால்நடை மருத்துவ கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள், விஞ்ஞானிகள் 25 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் கால்நடை மூலிகை வைத்திய அனுபவங்களை சேவா தொண்டு நிறுவன பணியாளர்கள்: விவேகானந்தன், சகுந்தலா, செல்லம் ஆகியோர் பகிர்ந்து கொண்டனர். இதில் மசாலா உருண்டை, மத்தான் தைலம், குடற்புழு நீக்க மருந்து தயார் செய்யும் முறை விளக்கமாக எடுத்து கூறப்பட்டது. கால்நடை மூலிகை வைத்தியத்திற்கு பயன்படுத்தப்படும் மூலிகை செடிகள் கண்காட்சியில் காண்பிக்கப்பட்டன.

## மின்கம்பத்தில் ஏறும் கருவி



திரு. செந்தில் (வயது 37). மேலூரில் தாண்டவர் இன்ஜினியர் ஒர்க்ஸ் லேத் பட்டறை நடத்தி வருகிறார். இவர் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் மின் கம்பத்தில் ஏறும் கருவி, நிலக்கடலைகளை செடியிலிருந்து பிரிக்கும் கருவி போன்றவற்றை வடிவமைத்துள்ளார். மின் கம்பத்தில் ஏறும் கருவி ரூ. 2000 ஆகும். இக்கருவி யை பயன்படுத்திய மின்சாரவாரிய ஊழியர்கள் இதன் பெருமையை பற்றி எடுத்து கூறுவதால் இது வரை 2500 கருவிகள் விற்பனை செய்துள்ளார். இவருடைய பல கண்டுபிடிப்புகள் பற்றிய விவரம் நம் வழி வேளாண்மை பருவம் – 26, இதழ் – 2 (ஜூலை– செப்டம்பர் – 2016) ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியை கீழ்கண்ட மின்வாரிய பணியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.1. சுருளியப்பன், தேனி, செல் 7810090100, 2. முனியசாமி, இராமேஸ்வரம், செல் : 7598097932, 3. திரு. ராஷ்குமார், திருநெல்வேலி, செல்: 9944017152, 4. திரு. நாகராஷ், அருப்புக்கோட்டை செல்: 9751553843. இக்கருவியினால் 5 மின்கம்பங்கள் ஏறும் நேரத்தில் 10 மின்கம்பங்கள் ஏறிவிடலாம்.

எஸ். செந்தில்
த/பெ. சுப்பிரமணியன்
தாண்டவர் லேத் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
சிவகங்கை ரோடு
மேலூர், மதுரை மாவட்டம்
செல் : 9944437098

## புதிய கண்டுபிடிப்பாளர் சங்கமம்



தேனி மாவட்டம் காமாட்சிபுரம் கிராமத்தில் சென்டெக்ட் கே.வி.கே மற்றும் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் புதிய கண்டுபிடிப்பாளர் சங்கமம் மே மாதம் 4–5 தேதிகளில் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலிருந்து கண்டுபிடிப்பாளர்கள், வைத்தியர்கள் கலந்து கொண்டு தங்கள் கண்டுபிடிப்புகளை எடுத்து கூறினார்கள். இதில் சிறப்பு விருந்தினராக தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையிலிருந்து திரு. பர்வேஷ் அவர்களும் தேனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்களும் கலந்து கொண்டனர்.

## கால்நடைகள் பராமரிப்பு

**ஆடுகள் :** மாதம் ஒரு முறையாவது குளிப்பாட்ட வேண்டும். வேகு துாரம் ஓட்டி செல்ல வேண்டும் மேய்ச்சலுக்கு. நல்ல நீரை குடிக்க வைக்க வேண்டும். உண்ணி பூச்சிகலிருந்து பாதுகாக்கவும், காணைகள் மற்றும் வயிற்று பூச்சிகளுக்கு மூலிகைகளை பயன்படுத்த வேண்டும். இலைகளையும் உண்ண வெட்டி கொடுக்கவும். செந்தண்ணீர் குடித்தால் ஆடு ஆரோக்கியமாக இருக்கும்.

**நாய்கள்:** இவைகளை கவனமாக வளர்க்க வேண்டும். இவற்றிற்கு வாரம் ஒரு முறை இறைச்சி எடுத்து கொடுக்க வேண்டும். எந்த நேரமும் கட்டியே வைக்க கூடாது. 3 மாதம் ஒரு முறை தடுப்பூசி போட வேண்டும். நாய்க்கு சூடான உணவு கொடுக்க கூடாது. இனிப்பு கொடுக்க கூடாது.

**கைகால் நீண்ட நாள் வழியை போக்க:** வேப்ப மரத்தின் இலை புளிய மரத்தின் இலை, ஆரஸ்பதி மரத்தின் இலை ஆகிய இலைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அதனை இளஞ்சூடாக வற்றி குளித்தால் உடல் வலி நீங்கும் . சிறிது வேப்ப எண்ணெய் தேய்த்தும் குளிக்கலாம்.

**பயன்:** உடல் வெப்பம் குறையும், இரத்த ஓட்டம் சீராகும்.

**பிரண்டை கொடி:** பிரண்டை கொடியை எடுத்து அதனை வேப்பஎண்ணெய்யை கொதிக்க வைத்து பிரண்டை நைத்து தாளிக்கவும். அதனை கால்நடைகள் சண்டை இட்டுக் கொண்டு தையல் அளவிற்கு காயம் ஏற்பட்டால். இதனை எடுத்து இளஞ்சூடாக அந்த காயத்தில் சாறை பிழிந்து வைத்து வைத்து எடுத்து ஒத்தடம் கொடுக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் இரத்தம் வெளியேறுவது நின்று விடும். தசைகள் சுருங்கும். வலியை குறைக்கும்.

**தும்பை இலை :** தும்பை இலையை அரைத்து சிறிது மஞ்சள் சேர்த்து குடித்தால் சளி, இருமல் குறையும். காயத்தில் புழுக்கள் வைத்தால் கால்நடைகளுக்கு தும்பை சாறை ஊற்றினால் புழுகள் வெளியே வந்து விடும். அதனை எடுத்து சுத்தம் செய்து காயத்தை சரி செய்யலாம்.

**திருகுகள்ளிபால் :** இதனை கால்நடைகள் கால் எலும்பு முறிந்தால் அதனை திருகுகள்ளிபாலில் துணியை நனைத்து பனை மட்டையை வைத்து நேராக வைத்து காலை சரியாக கட்டி பாலை ஊற்றவும். இவை இருக்கமாக வைத்து எலும்பை சேர்த்து சரி செய்யும்.

பயன்கள் :உடைந்த கால்கள் சீக்கிரம் சரியாகும். எலும்புகள் சேர்ந்துவிடும்.

**கால்நடைகளுக்கு மூக்கு வயிற்று போக்கு அதிகம் காணப்பட்டால் :** அதற்க்கு தென்னை மரத்தின் பாலையின் மொட்டின் சாறினை வாயில் பிழிந்து விடவும் அல்லது பூவரசம் பூவின் மொட்டுகளை அரைத்து கொடுக்கவும்.

**வயிற்றுப்போக்கை நிறுத்த :** வயிறு வலி மற்றும் எரு, மற்றும் சாணம் வெளியேறாமல் இருந்தால் மற்றும் வயிறு பொறுமல் ஆகியவற்றிற்க்கு மிளகு, குப்பைமேனி கொடுக்கவும். அல்லது தலைசுருளி இலை மற்றும் வேரினை கொடுக்கவும்.

வெள்ளச்சாமி
ஆற்காடு கிராமம், குன்றக்குடி அஞ்சல் – 630206
காரைக்குடி வட்டம்
சிவகங்கை மாவட்டம்
செல் : 8940422524, 9047275410

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய்; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 150 | 1500 |
| சமூக சேவா மையங்கள் | 130 | 1300 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 120 | 1200 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1200) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1450 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடைகிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com